தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

செயலுக்கு முன் வருவோம்!

கொட்டிடு குப்பை நிறைவது போல், அலங்
கோல எழுத்தாளர் விஞ்சிவிட்டார்!
வெட்டி முறிப்பவர் போல்,பலர் மேடையில்
வீணுரை யாற்ற,முன் வந்து விட்டார்!
கட்டிய கோட்டை முழுவதிலும் வெறும்
கற்பனைப் பூண்டை, நிரப்புவதோ?
எட்டி நடையிடு வீர்? தமிழ் மாந்தரீர்,
ஏற்ற வினைகளைச் செய்திடவே!

உழைப்பைச் சிறிதென எண்ணிடும் மாந்தரிங்(கு)
ஊர்வலம் போகவே கூடிவிட்டார்!
பிழைப்பைப் பெரிதென எண்ணி விட்டார்; சிலர்
பேச்சையே மூச்செனப் பேசிடுவார்!
தழைப்பது வோ, தமிழ்ச் செம்பயிர் பேச்சினில்?
தன்மானங் கொண்டவர் முன்னெழுவீர்!
உழைப்பைப் பெரிதெனப் போற்றிடுவீர்! செயல்
ஒன்றே உயர்வென நாமுழைப்போம்!

சுவடி: 9. ஓலை: 3-4. விலை: 75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

0:261: அருந்தமிழ் ஓதியன்! அறஞ் சொலுஞ் சித்திரன்
'ஆற்ற லதுவுடை யழகமர் திரு'வினன்!
போற்றருந் தமிழ்மர புலையாது கெழுவிட
நோற்கு'மா சிரியப்' பூட்கையோ னவனே!
மயலறுத் .தமிழ ருயவுநீங் கெய்தலின்,
வியன்பணி நின்று விறல்பகை ஓரீஇ
வீடென்று வருவாழ்வதன்
பீடெய்தும் படியிடித்து
நாலென்னும் வரைநிறுத்தும்
ஆறுத் தவநிலை நோலா துஞற்ற
ஏயு மிவன்சொல் விரகொடு
தோயுத லல்லாற் றுறைவே றின்றே!

(இப்பாடல், பாவலரேறவர்களின் எதிரதாக் காக்கும் அறிவுடைத் தமிழ்த்தொண்டும், பாவாணர்ப் போற்றும் பயிலரும் பெற்றியும் ஆயவற்றைப் பொதுவாகவும், தென்மொழி ஓலை 1, சுவடி 9 மேழ-விதழ் ஆசிரியவுரைப் பாவினைச்சிறப்பாகவும், உட்கொண்டெழுந்தது.

—மறைமலையடியுறை, கோவை—12.

0: 262: உங்களை 'அழுக்காறு கொண்டவன், கையூட்டு வாங்குபவன், பதவிவெறியன்; என்று ஏசி, தி. மு. க. மாண்புகளுக்குப் புகழ் பாடும் புதுவையூரன் மடலைக் 'காஞ்சி'யில் கண்டு அளவிலா வருத்தமும், கவலையும் அடைந்தேன். உண்மைகள் கசப்பாகத்தானிருக்கும். உண்மைகளைச் சொல்லுபவன் சிறையிலடைக்கப்படுவான். சிலுவையில் அறையப்படுவான்; இரண்டகன் (துரோகி) அழிசினன் (நாசகாரன்) என்றும் தூற்றப்படுவான்; தூக்கு மரத்திலும் தூய வாய்மையாளர்கள் ஏற்றப்படுவதுண்டு. ஆனால் உண்மை, மறையாது. அது போல நீங்கள் கூறிய உண்மையை மறுக்கமுடியாது.

—நா. காமாட்சி அடியான், திண்டிவனம்.

0:263: கடந்த காஞ்சி இதழைத் தாங்களும் கண்ணுற்றிருப்பீர்கள் என எண்ணுகின்றேன். தமிழனுக்குத் தமிழனே காழ்ப்பும், கசப்பும், பொருமையும் கொண்டு தங்களைத் தாங்களே கீழ் இறக்கிக் கொள்ளும் காலம் என்றுதான் தமிழக வரலாற்றில் முடியுமோ அன்று தான் தமிழகத்தின் பொற்காலம். முடிசூடா மன்னர்களைக் கூடக் குப்பை மேட்டில் தூக்கி எறிந்திருக்கும் கால வரலாற்றை உணர்ந்திருக்க மாட்டார்களோ, வரலாற்று நாயகர்கள்; அன்றி அறிந்தும் அறியாதது போல் நடிக்கின்றனரோ! கானல் நீரைக் காதல் நீராகக் கொண்டு கலங்கி நிற்கின்றனர். அஃது என்று தான் வெறும் கதையாகப் போகுமோ?

—க. காந்தி, பஞ்சலிங்கம் பாளையம்.

0: 264: செந்தமிழ் நாடு வட நாட்டு வல்லாட்சியிலிருந்தும் அதன் அடிமைத்தனத்திலிருத்தும் விடுதலை பெற்று முழுஉரிமையுள்ள நாடாக வேண்டுமென்ற குறிக்கோள் கொண்டது தென்மொழி. செந்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

தென்மொழி
இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 9: ஓலை: 3-4.

இரட்டை-கட. தி. பி. ௨00௨ – (சூலை-ஆக. – 1971.)

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரன்.**

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

கோவில்களில் உள்ள ஆரிய இடைத் தரகர்களை அகற்றுக.

எல்லாம் வல்ல ஓர் இறைப் பேராற்றல் இவ்வனைத்து உலகங்களையும் கட்டி யாண்டு கொண்டிருப்பதை அறிவியலும் மறுத்ததில்லை. அவ்வாற்றல் கல், மண் என்ற வேற்றுமையின்றி, அனைத்துக் குற்றுயிர்களிலும் சிற்றுயிர்களிலும் ஊடுருவி, யாவற்றையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பதையும் உள்ளொளி சான்ற எவரும் மறுக்க முடியாது. அவ்வாற்றலே அறிவாயும் அறியப் பெறும் பொருளாயும் புடைப்பெயர்ச்சி மாறி, அதுவதுவாய் இப் பேரண்டங்கள் அனைத்திலும் நின்று இயங்கியும் இயங்குவித்தும் வருவதை உளத்தாலும் உணரலாம்; அறிவாலும் அறியலாம்.

இல்லை என்றாலும் அது தான்; உண்டு என்றாலும் அதுதான். இவ்வாற்றலை அது என்னலாம்; அவன் என்னலாம்; அவள் என்னலாம். சொற்களாயும், சொற்படு பொருள்களாயும், பொருளுறு வடிவங்களாயும், வடிவமை குணங்களாயும், பன்னூறாயிரம் வேற்றுமை மாற்றங்களால் இயங்குவனவாயும் உள்ள அம் மெய்ப்பெரும் பரம்பொருளை எனது என்றும் உனது என்றும் வகுப்பவனும், வகுத்துப் பேசுபவனும் கல்லாத முடனாகவோ, கற்றறிந்த பேதையாகவோ, அன்றி வல்லடி வழக்கனாகவோதான் இருத்தல்வேண்டும். உலகத்துப் பொருள்களையே எனது உனது என்று பேசுதல் அறியாமையாகின்ற பொழுது, உலகப் பொருள்களையெல்லாம் உள்ளடக்கிக்கொண்டு கிடக்கும் ஓர்ஆற்றலை, மெய்ப்பொருளை, என்னுடையது என்றும், உன்னுடையது என்றும் பேசும் அறிவிலிகள் எச்சமயத்தைச் சார்ந்தவராயினும் அவர்கள் உலக வியக்கத்திற்கு மாறுபட்டவரே யாவர்.

இம்மெய்ப்பொருளுக்குக் கோவில் தேவையில்லை; கோலங்களும் தேவையில்லை. இவ்வுலகமே ஏன் இப்புடவியே [பிரபஞ்சமே] அதன் திருக்கோயில்; இவ்வுலகப் பொருள்களே அதன் திருக்கோலங்கள். அறிவறிந்த மெய்யறிவோனுக்கு மலமும் சந்தனமும் ஒன்றுதான்; மண்ணும் பொன்னும் ஒன்றுதான்; இலையும் பூவும் ஒன்றுதான்; அஃதாவது ஒரே மதிப்புடையவை தாம். ஆனாலும் அறிவறியாப் பொது மாந்தர்க்குக் கற்பிதங்கள் தேவைப்படுகின்றன. இந்தக் கற்பிதங்கள்தாம் பொருள்களாயும் அவற்றின் வேறுபாடுகளாயும் உலகத்தில் நின்று நிலவுகின்றன. கற்பித அறிவையே சமயநூலார் மாயையாக உருவகித்துள்ளனர். கற்பிதம் என்பது ஒன்றை ஒன்றாகக் கருதிக் கொள்வது. தாயை முதற்கடவுள் என்பதும், தந்தையும் அவர் போல் உள்ள பெரியோரும் வணங்கப் பெறுவதும் இக்கற்பிதத்தின்பாற் படுவனேயாம். மெய்ப்பொருளியலை எந்த இங்கர்சாலாலும், மார்க்சாலும், பெர்ட்ரண்டுரசலாலும், ஓபாரினாலும், சீன் மெசிலியராலும் மறுத்து விட முடியாது. அறிவியற் பேராசிரியர்களான நியூட்டன், எடிசன், ஐன்சுடைன் ஆகியோரும் இறையாற்றலை ஒப்புகின்றனர். அறிவியலுணர்ந்த எவனும் மெய்யறிவியலை ஒப்புக் கொண்டுதான் ஆதல் வேண்டும். அறிவியலடிப்படையை உணராதவனே இறைப் பேராற்றலை மறுக்கின்றான். இவ்விடத்து நம் நாட்டில் பரப்பப் பெற்றுள்ள கற்பிதப் பூசல்கள் நிறைந்த ஆரியச் சமயப் போலித்தனங்களையும் உணர்ந்தே கூறுகின்றோம்.

ஆனால் மெய்யறிவியலும், உலகியற் கற்பிதங்களும் எந்தச் சமயத்திற்கோ, எந்த ஒரு சமயக் குரவர்க்கோ உடைமைகள் அல்ல. இன்று உலகில் உள்ள மதங்கள் யாவும் உலகியற் பொருள்களைப் போன்ற கற்பிதங்களே! இம் மதத்தில் தான் உண்மையிருக்கின்றது. இதில் இல்லை; என்று பேசுபவன், 'கதிரவன் என்னாட்டில்தான் இருக்கின்றது; வேறெந்த நாட்டிலும் இல்லை' என்று பேசும் பேதையைப் போன்றவனே யாவான். மதக் கற்பிதங்கள் குல வேறுபாடுகளைப் போல் பூசல்களை விளைப்பவையே யாகும். குலங்களில் எவ்வாறு உயர்வு தாழ்வு கற்பிக்கப் பெற்றதோ, அவ்வாறே மதங்களிலும் உயர்வு தாழ்வுகள் கற்பிக்கப் பெற்றன. கற்பனை என்பதும் ஒருவகை உண்மையே. இல்லாத ஒன்றை எவரும் கற்பனை செய்து விட முடியாது. கற்பனை செய்தவை யாவும் நமக்கு உகந்தவை யாக விருக்கலாம்; உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் உகந்தவையும், உண்மையும் அவைமட்டுந்தாம் என எண்ணிவிடக்கூடாது. நம் அடுப்பில் உள்ள நெருப்பும் நெருப்புத்தான். கதிரவன் நெருப்பும் நெருப்புத்தான், அதனால் நெருப்பு என்பதே கதிரவன்தான் என்பதோ, நம் அடுப்பில் இருப்பதுதான் என்பதோ அறியாமையாகும். இனி புறநெருப்பாக வன்றி அக நெருப்பாய் உள்ள மிளகாய் போலும் பொருள்களும் உள்ளனவென்று அறிதல் வேண்டும்.

இறைப் பொருளும் அப்படித்தான். இதை எழுதுபவனும் அவன் எண்ணும் கருத்தும், அக்கருத்தைப் புறப்படுத்திக் காட்டும் இவ் வெழுத்துகளும், அவ்வெழுத்துகளைப் படிக்கும் நீங்களும் இன்னும் யாவும் மெய்ப்பொருளின் கூறுபாடுகளே! ஒப்புதலும் மறுப்பும், விருப்பும் வெறுப்பும், அன்பும் சினமும், குளிர்ச்சியும் சூடும், உண்டும் இல்லையும் அப்பொருளின் கற்பிதத்தோற்றங்களே! இவையல்லாமல் நேரடியாக இறைப் பொருளை நுகர்பவர்களுக்கு இக்கற்பித அலகுகள் தேவையில்லை. காற்றை இயற்கையாக நுகர்பவர்க்கு விசிறியின் வீசல் தேவையில்லை யன்றோ?

ஆனாலும் மெய்ப்பொருளின் கற்பிதங்களாக வுள்ள கோவில்களும் அவற்றின் கற்பித வழிபாடுகளும் பொதுமாந்தர்க்கு—அஃதாவது காற்றை நேரடியாக நுகரவியலாதவர்க்கு—ஒருவகையில் தேவையே! கால விரிவில் அவையும் மக்கட்குத் தேவையில்லாமல் போகலாம் அதுவரை கோவில்களும் இருக்கலாம்; அங்கு வழிபாடுகளும் நிகழலாம். ஆனால் அவை குறிப்பிட்ட ஒருவர்க்குதான் சொந்தம்; பிறரெல்லாம் ஒதுங்கி நிற்கத்தான் வேண்டும் என்பவர்கள் மத

வெறியர்களே – மதத் திருடர்களே ஆவர். அவர்கள் என்ன இனத்தவராயினும்; எச்சமயத்தைச் சார்ந்தவராயினும் அவர்களைக் குமுகாயக் குற்றவாளிகளாக்கிக் கூண்டில் நிறுத்துதல் வேண்டும். மதத் துறையிலும், மக்கள் உரிமை முறைகளிலும் ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னேக்கிச்செல்லும் அவர்களை வாழ்நாள் சிறைத் தண்டனைக் குள்ளாக்கி மக்களினமற்ற ஒரு தனித்தீவில் கூட குடியேற்றலாம்.

கோவில்களில் இருக்கும் வடிவங்களில் மட்டுமே இறைப் பொருள் இல்லை. உலக அனைத்துப் பொருள்களிலும் அப்பொருள் அதுவதுவாக நின்று இயங்குவதை எவரும் உணரலாம்; எவர்க்கும் உணர்த்தலாம். இத்தகைய புறவெளிச் சமயக் கோட்பாடுகளும், அகவொளிச்சமயக் கோட்பாடுகளுந்தாம் மாந்தர் யாவர்க்கும் ஏற்றவை; தக்கவை. பிறவெல்லாம் பூசல் விளைப்பவை. இயற்கை வழிபாடு தான் தமிழ்வழிபாடு. சிவனியமும் மாலியமும் இயற்கை திரிந்த வழிபாடுகளின் விரிந்த கூறுபாடுகளே! ஒரு கூம்பின் முனையை இயற்கை வழிபாட்டிற்கு இணையாகக் கூறினுல், அதன் விரிந்த அடிப்பகுதியைச் சமயங்களுக்கு ஒப்பிடலாம். ஆரிய மதங்களின் ஊடுருவலுக்குப் பின்னர்தாம், தமிழ்வழிபாடு தன் தூய்மையினின்று நெகிழ்ந்தது. இறைவழிபாட்டிற்கு மந்திர மாயங்கள் தேவையில்லை. இக்கரண முறை ஒரு திருமணத்தில் நிகழ்த்தப்பெறும் முன், பின் சடங்குகளைப் போன்றவையே! திருமண நிகழ்ச்சி மாந்த உலகியல் ஒழுக்கத்திற்குத் தேவையானது. ஆனுல் இறை வழிபாடு வெறும் உலகியல் ஒழுக்க நிகழ்ச்சி மட்டுமன்று; இயற்கை நிகழ்ச்சி. ஆம், மூச்சை நாம் நம்மையறியாமல் உள்ளிழுத்து வெளிவிடுதலைப் போல்– நம்மையறியாமல் நம் அகப்புற உறுப்புகள் செயல்பட்டுக் கொண்டிருப்பதைப் போல், நம்மையறியாமல் நாம் இறைப் பரம்பொருளை வழிபட்டுக் கொண்டும், அதனுள் நாம் ஊடுருவிக்கொண்டும், நம்முள் அஃது ஊடுருவிக்கொண்டுமாய் இருக்கின்றோம். இந்நிலையில் வழிபாடு எற்றுக்கு? மேலும் சிற்றறிவும் சிறுதொழிலும் கொண்ட சிற்றுயிர்களாகிய நம் வழிபாட்டைப் பேரறிவும் பெரும் பேராற்றலும் பெருவினையும் கொண்ட மெய்ப்பரம்பொருள் விரும்புவதென்பது ஒரு கற்பித நினைவே! இது நிகழ்ந்தாலும் ஒன்றுதான்; நிகழவில்லையானுலும் ஒன்றுதான்; ஆனுலும் உலகியல் நடப்பின் ஒழுகலாறு வேண்டியும் சிற்றுயிர்களின் மன வளர்ச்சி வேண்டியும் மொய்ம்பு நிலை பெற்ற முனிவோர் கோவில் வழிபாடுகளைப் பொதுவியல் மாந்தர்க்குப் பொதுவென் ருக்கினுர்.

இனி, வழிபாடே பொதுவென்பது உலகியற் பொதுவறமாய் இருக்க, அதைச் சமசுக்கிருதத்தில்தான் ஆற்றுதல் வேண்டும்; அதுவும் ஓர் ஆரியப்பார்ப்பானைக் கொண்டுதான் செய்விக்கவேண்டும் என்பதும், அதற்குப் பார்ப்பனப் பரம்பரையே மடிகட்டிக்கொண்டு முன்னிற்பதும் கண்டிக்கத் தக்கவை; கடியத்தக்கவை; மீறினால் தண்டிக்கத் தக்கவை. எனவே கோவில்களில் தமிழிலும் வழிபாடு செய்யலாம் என்று பெரியதொரு புரட்சி மாற்றத்தைச் செய்து காட்டிய தமிழக அரசு, இவ்வாரியப் பார்ப்பனர்களின் அரற்றலுக்கெல்லாம் அஞ்சாமல், ஆரியப் பார்ப்பனர்கள் கோவில்களில் இடைத்தரகராயும் இருக்கத் தேவையில்லை என்பதையும் செயலுக்குக் கொணர்தல் வேண்டும். இரண்டுக்கும் ஒரே வகையான எதிர்ப்புத் தானே வரும். அதை மானமுள்ள தமிழர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

அண்மையில் சென்னையில் நடந்த **இந்து தேவாலயப் பாதுகாப்பு மாநாட்டில்** ஆரியப் பார்ப்பனரும் அவர்களைச் சார்ந்த வல்லடிமைத் தமிழர்களும் கொணர்ந்த தீர்மானங்கள் எந்தத் தமிழனின் குருதியையும் கொதிப்பேறச் செய்வன. **"கோவில் பராமரிப்புகளை அரசினர் ஏற்கக் கூடாதென்பதும், நடைபாதைக் கோவில்களை அரசினர் அகற்றக் கூடாதென்பதும், தியாகராயர் திடீர்ப் பிள்ளையாரை மீண்டும் தோண்டிய இடத்திலேயே புதைக்க வேண்டும்** என்பதும் இவர்களின் கோரிக்கை. இக்கோரிக்கைகள் ஆரிய இனத்தின் வல்லாண்மையை இந்நாட்டில் மேலும் வேரூன்றச் செய்வதற்கான தந்திர மொழிகளே. பன்னூறாண்டுக் காலமாய் அடிமையுற்றுக் கிடந்த தமிழன் இப்பொழுதுதான் சிறிது கண் விழித்து எழுந்து அமர்ந்துள்ளான். இனி இவன் நடையிடத் தொடங்குவானானால் தமக்குற்ற போலிப் பெருமைகளெல்லாம் தலைகீழாகப் போய்விடும் என்பதை நன்குணர்ந்து கொண்ட இவ்வாரியப் பூஞ்சைகள், மேலும் தமிழினத்தை வீழ்த்தி அடிமை கொள்ளச் செய்யவே இக்கோரிக்கைகளை எழுப்பியுள்ளன. எனவே இத்தகைய கோரிக்கைகளை அப்படியே குப்பைத் தொட்டியில் தூக்கியெறிந்து விட்டு, நாம் மேலே கூறிய திருத்தத்தைத் துணிந்து செயலாற்றுதல் வேண்டும் என வேண்டிக் கொள்கின்றோம்.

கோவிலில் இறைவழிபாடு செய்கையில் இவ்விடைத்தரகர்கள் எதற்காகக் குறுக்கே நிற்க வேண்டும். இவர்களுக்கும் இறைவனுக்கும் மட்டும் என்ன அவ்வளவு நெருக்கம்? நம்மையெல்லாம் அங்குள்ள இறைவனுக்குப் பிடிக்காதோ? பிடிக்காத நம்மை அவன் ஏன் நேரடி

யாகவோ–பிறர் வழியாகவோ படைத்தல் வேண்டும்? அங்குள்ள இறைப் படிமத்திற்கு வழிபாடு செய்பவர்கள் எப்படித் தமிழிலும் செய்யலாமோ, அப்படியே தாங்களாகவும் செய்யலாம் என்றும் ஒரு சட்டமியற்றுதல் வேண்டும். அதுவுமன்றி இவ்விடைத் தரகர்களே அங்குத் தேவையில்லை என்றும் செய்துவிடவேண்டும். தேவையானால் அங்குள்ள பொன்னையும் பொருள்களையும் காப்பதற்குக் காவல் வைத்து விடலாம். இக்குமுகாயப் புரட்சியை இன்று செய்யத் தவறினால் வேறு என்றும் செய்ய முடியாது. கிறித்துவ, இசுலாமியத் திருக்கோவில்களில் இத்தகைய இடைத் தரகர்களா வழிபாடுகளை நடத்திக் கொடுக்கின்றனர்? எனவே இக் கோவில்களில் மட்டும் இந்தத்தரகர்கள் எதற்காக இருத்தல்வேண்டும்? இது பற்றி நன்கு எண்ணி, பகுத்தறிவாளர்களின் அரசு என்று கூறிக் கொள்ளும் பெருமைக்கேற்ப, தமிழ்வழிபாட்டுடன், இம்மாற்றத்தையும் சேர்த்துச் செய்யுமாறு தமிழக அரசை வேண்டிக் கொள்கிறோம்.



பல்கலைக் கழகங்களே,
பெரியாரைப் பாராட்டுங்கள்!

பெரியார் ஒரு கட்சியின் தலைவரல்லர். ஓர் இனத்தின் தலைவர்; ஒரு காலத்தின் தலைவர்; ஒரு வரலாற்றின் நாயகர். அவர் தோன்றியிருக்கவில்லையானால் ஓர் இனத்தின் அடிமை வரலாறே முற்றுப் பெற்றிருக்காது. ஒரு நாட்டின்மேல் போர்த்துக் கிடந்த இருள் விலகியிருக்காது. தமிழனின் தலை எழுத்தே மாற்றப்பெற்றிருக்காது. தன்மானமற்ற நம் இனம் ஆரியச் சேற்றில் மேலும் மேலும் அழுந்திக் கதிகலங்கிப் போயிருக்கும். ஏறத்தாழ மூவாயிரமாண்டுக்கால வரலாற்றை மாற்றியமைத்த பெருமையில் முழுப்பங்கும் பெரியாருக்குண்டு. கை ஓயாமல் அவர் அடித்த அடி, வாய் ஓயாமல் அவர் பேசிய பேச்சு, கால் ஓயாமல் அவர் நடந்த நடை, இவற்றின் அடிப்படையில் அவர் எழுதி முடித்த தன்மான வரலாறு, கட்டி முடித்த பகுத்தறிவு மாளிகை, ஆக்கிப் படைத்த சீர்திருத்தக்கருத்துகள் – யாவும் மாந்த இனம் முழுமைக்கும் சூடு கொளுத்துபவை; வழி காட்டுபவை; என்றும் மறத்தற்கியலாதவை, எத்தகைய கொம்பனாலும் அசைத்து அழிக்க முடியாதவை.

நம் நாட்டில் வாழ்ந்தவர்களுள் பேச்சில் பெரியவர்கள் பலர்; சூழ்ச்சியில் வல்லவர்கள் பலர்; அவரவர் குல, சமயங்களை நிலை நாட்ட வெறி பிடித்து அலைந்தவர் பலர்; ஆனால் ஒரு முழு இனத்தின் துயரைத் துடைக்க-இழிவைப் போக்க – அடையாக அப்பிக்கிடந்த வரலாற்றுக் கீழ்மையைத் தோண்டி எடுத்துத் துப்புரவாக்க, அயராது ஒருவர்–தனி ஒருவர் அல்லும் பகலும் பாடுபடுகின்றரென்றால் அவர் பெரியார் ஒருவர்தாம்! தமிழனின் பல்லாயிரம் ஆண்டுக்கால வரலாற்று நெடுகிலும் தமிழகம் வள்ளுவர் பலரைக்கண்டிருக்கலாம்; கம்பர் பலரைப் பார்த்திருக்கலாம்; இளங்கோவடிகள், மாணிக்க வாசகர் போலும் சமயத்துறவியர் பலரைப் பெற்றிருக்கலாம். ஆனால் ஒரே ஒரு பெரியாரைத் தான் அது பெற்றுத் தந்திருக்கிறது.

"நம் நாட்டிற்கு விடுதலை கிடைத்தது. மக்களின் அடிமை தீர்ந்தது; வெள்ளைக்காரன் விரட்டப்பெற்றான்" என்றெல்லாம் வாய்கிழியப் பலர் பேசலாம். அரசியலாலும் சமயத்தாலும் ஊதியம் பெற்ற இராசாசி போன்ற பெரியவர்கள் பலர் பக்கம் பக்கமாக எழுதித் தீர்க்கலாம். ஆனால் அவர்களால் ஒரு தெருவைக்கூடச் சுற்றி வரமுடியாது. சுற்றிவந்தாலும் இரவு பகலாக உயிரைப் பணயம் வைத்துத் தொண்டை கிழியக் கத்த முடியாது. 'மக்களே இழிவை நீக்குங்கள்; தன்மானம் பெறுங்கள்' என்று நாள்தோறும் மக்களை வேண்டிக்கொள்ள முடியாது. இதுவரை அப்படி வேண்டிக் கொண்டவரும் கிடையாது. ஆனால் அவற்றிற் கென்றே பிறந்தவர் இதுநாள் வரையிலும், இனிமேலும் பெரியார் ஈ. வே, இராமசாமி ஒருவராகத்தான் இருக்கமுடியும். அவர் பேசிய பேச்சுக்களை ஏதென்சு நகரைச் சுற்றிவந்த சாக்ரடீசும் பேசியிருக்க முடியாது. உலகப் பெரும் பேச்சாளர் என்று பெயரெடுத்த தொமசுத்தனீசும் பேசி யிருக்க முடியாது. அவர் சுற்றிய தொலைவைக் கிரேக்க மாமன்னன் அலெக்சாண்டரும் சுற்றியிருக்க முடியாது; அவர், பிரெஞ்சு மாமற வன் நெப்போலியனை விடப்போரிட்டார். உருசிய இலெனினை விடப் பொதுமக்களை நேருக்கு நேராகக் கண்டு பேசினார். குருச்சேத்திரப் பாரதப் போரை விட ஆரியத்தின் மேல் அவர் தொடுத்த போர் மிகப் பெரியது. கடுமையானது. வேறு எவரும் தொடுக்க அஞ்சியது: நினைத்துத் தொடை நடுங்கியது.

சமயப்பூசல்களையும் போலி ஆரியத் தன்மைகளையும் வளர்ப் பதற்காக இன்று உலாவரும் சங்கராச்சாரியார்களுக்கிருக்கும் வாய்ப்பை மட்டும் இந்த நாடு அவருக்குத் தருமானால், அவர் இந்திய நாட்டின் மூலை முடுக்குகள் ஒவ்வொன்றிலும் நுழைந்து தம் சீர்

திருத்தக் கருத்துகளைப் பரப்பத் தயங்கமாட்டார். அவர் செய்து வரும் மக்கள் தொண்டு அவ்வளவு விரிவானது; வலிவானது; இந்த நாட்டுக்குத் தேவையானது. அவர் அடித்த அடியில் தான் இன்று ஆரியம் பூட்டுக் கழன்றுபோய், தலைக்குப்புற வீழ்ந்து கிடக்கின்றது. இராசாசி அவர்களும் அவரைச் சுற்றிய ஆரியப் பார்ப்பனர்களும் இன்றைக்கு நினைத்துப்புழுங்கிச் சாகின்ருர்களென்ருல் அதுபெரியார் எழுப்பிய நில நடுக்கங்களாலும், அவர் வாயினின்று வெடித்துக் கிளம்பிய எரிமலைத் தீக்குழம்பாலுந்தான் என்பதை எவரும் மறுத்தற் கியலாது.

அவரால்தான் '**தொண்டு**' என்னும் சொல்லுக்குரிய முழுப் பொருளையும் உருவாக்கிக் காட்ட முடிந்தது. ஆயிரமாயிரம் ஆண்டுக்காலமாய் நசித்துக் கிடந்த ஓரினத்தின் இழிந்த வரலாற்றை ஐம்பதாண்டுக் கால இடைவிடா முயற்சியில் எரித்துப் பொசுக்கிச் சாம்பலாக்கிக் கரைத்துக் குடித்துக் கொண்டிருப்பவர் **பெரியார்.** தமிழ்மொழியைப் பொறுத்த அளவில் அவர் கொண்டிருக்கும் கருத்துகள் சில பிழையாக அவர்க்கு உணர்த்தப்பட்டவை எனினும் இனத்தைப் பொறுத்த அளவில் அவர் செய்யும் செயல்களை நாம் தலை வணங்கிப் போற்றுகின்ரேம். தொண்ணூற்று மூன்ரும் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அத்தமிழர் தலைவர், தமிழகம் அரசியல் விடுதலை பெறும் வரையிலும், அதற்கு மேலும் வாழ்ந்து வழிகாட்ட வாழ்த்துகின்ரேம். அவராற்றிய தொண்டைப் பாராட்டித் தமிழகத்தின் மூன்று பல்கலைக்கழகங்களும் அவர்க்குப் **பண்டாரகர் (Doctor)** பட்டம் கொடுத்துப் பெருமைப்படுத்துமாறும், அதனுல் அவையும் பெருமை பெறுமாறும் வேண்டிக் கொள்கின்ரேம்.

—பெருஞ்சித்திரன்.

---

o கட்சிகள் இருந்துதான் குடியரசு நடக்கவேண்டும் என்பதில்லை.

o உண்மையான மக்களரசமைப்பிற்குக் கட்சிகள் ஒரு தடையே!

o புத்தம் புதிய அரசியல் மறுமலர்ச்சிக் கொள்கைக்கு .. உங்களை அழைத்துப் போக விரைவில் வருகிறது!

“அரசியல்”

முழு விளக்கமும் பின்னர்!

ம. 116. பார்ப்பன எதிர்ப்பியக்கம்!

என் அன்புக்கினிய ஐயா! வணக்கம்.

முத்தமிழுக்கு முடிவுகட்ட முனைந்து பண்டு முதல் இன்று வரை ஆக்கப்பணிகளில் ஈடுபட்டு வரும் பார்ப்பன நரிகளும், பிற மொழியார் எறிகின்ற எச்சில்களை சிறந்ததென அவர்களின் கால்களை வருடி வருகின்ற நாய்களும் இம்மண்ணுலகத்தில் உள்ள-வரை நாமிடும் அரிமா முழக்கமும், செயலாக்கமும் பயனற்றுப் போகுமோ என்ற ஐய உணர்வு எனக்கும் உண்டு. எனவே, அத்தகைய கொடிய விலங்குகளை வேரோடு தரைமட்டமாக்கும் முறையில் ஈடுபடும் நிலையில் நாம் வந்துள்ளோம். அதற்கு நமக்கு நாமே அணித்தம் செய்ய வேண்டும்.

பார்ப்பன அட்டைகள், திருச்சி, சென்னை போன்ற வானொலி நிலையங்களில் குடிபுகுந்து கொண்டு தமிழனை உறிஞ்சுகின்ற கொடுமைகளை—ஐயோ! சொல்லவே முடியவில்லை. அவர்கள் பாட்டன் பூட்டன் ஈட்டிய சொத்துப் போல நினைத்துப்பேயாட்டம் ஆடுகி-றார்கள். அவர்களின் கொட்டம் அடங்க வழிவகுக்க வேண்டும்.

1—10—'70, 5—10—'70 - ஆம் பக்கல்களில் சென்னை வானொலி நிலையத்தினின்று இரு நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டன வாம். அவற்றின் தலைப்புக்கள் "Dial L for Love" "Under Secretary" - என்னே தலைப்புகள்! இந்நாடகங்களை எழுதிய போறிஞர்கட்குத் தமிழே புரியாதா? அல்லது தலைப்புக்குத் தமிழில் சொற்களைத் தேடி அலைந்து சோர்ந்து விட்டார்களா? பெயர்க்குத் தமிழ் நாடகம்; தலைப்போ ஆங்கிலம்! அப்பப்பா! என்னே பிற மொழியின்பால் அருள்!

இந்த வானொலியார் நடத்துகின்ற கொடுமைகளை நாம் பொறுத்துக் கொண்டிருப்பது நம்மை நாமே குழி தோண்டிப் புதைத்துக் கொள்கின்றோம் என்பது தான் பொருள். எனவே

கொடியர்களை அழிக்க, நாம் ஒவ்வொருவரும் தத்தம் ஊர்களில் எதிர்ப்பு ஊர்வலம் வந்து அவர்களின் கொடுமைகளை ஊர்க்கெடுத்துரைக்கவேண்டும். மேலும் நடுவணரசினின்று பிரிந்து செல்ல மாட்டோம் என்று கூறும் பித்தர்களுக்கு நேரிடையாகவே இடித்துரைக்கத் தயங்கக் கூடாது.

பேராயம், தி. மு. க. போன்ற பெருங் கட்சித் தலைவர்களுக்குத் தனித் தமிழன்பர்கள் ஒவ்வொருவரும் 'நடுவணரசின் கொடுமை' களை மடல் வழியாகத் தெரிவித்தல் வேண்டும். இங்ஙனம், இடித்துரைத்து மடல்கள் எழுதுவதால் ஓரளவேனும் மனம் திருந்தும் என்று நம்புகிறேன். தொடர்ந்து மடல் வழியாக எதிர்ப்புத் தெரிவிப்போம். இதுவே, நம்போராட்டத்தின் முதற்படியாக விளங்கட்டும்.

பெ. தமிழ்ப்பித்தன், போடி-மீனுட்சிபுரம். மதுரை (மா. வ)

ம. 117. தமிழன் இனியும் திருந்துவானா?

'மனோன்மணீய வாழ்த்தில் ஒரு மறு' என்ற தலைப்பில் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த் துணைப்பேராசிரியர் திரு. மது. ச. விமலானந்தம் என்பார், 'மஞ்சரி' என்னும் தாளிகையில் எழுதியிருந்த வியப்பான ஓர் ஆராய்ச்சிக்கட்டுரை தமிழர்கள் அனைவரின் கவனத்திற்குரிய ஒன்றாகும்.

சுந்தரனார் அவர்கள் தமது நாடக பாவியத்தில் தமிழ்த் தெய்வ வணக்கத்திலேயே ஒரு குறிப்பிட்ட மொழியை, இனத்தை நடுநிலையில்லாது காழ்ப்புணர்ச்சியோடு 'ஆரியம் போல் உலகவழக்கு அழிந்தொழிந்து' என்றும் சதுர்மறையா ரியம்வரும்முன் சகமுழுதும் நினதாயின்' என்றும் 'வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள், உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி', என்றும் சுட்டியிருப்பது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்? என்னும் தமிழ்ப் பண்பாட்டுக்கு முரணாக இருப்பதோடு, இச்செயல் அவர் தம் படைப்பான மனோன்மணியத்திற்கு ஒரு மறுவாகவே அமைந்து நிற்கிறது, என்கிறார் அந்த ஆராய்ச்சிக்காரர்!

இத்தகைய அன்னாரின் கூற்றுக்கு அடிப்படையாக ஒருசில தனிப்பட்ட அரைகுறை யாராய்ச்சியாளர்களின் கட்டுரைகள் துணை நிற்கின்றன. அன்னார் இவ்வாறு வரைவதற்கு ஏதுவாக இலங்கைப்

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த க. கைலாசபதி என்பாரின் ஒப்பியல் இலக்கியம்' என்னும் நூலின்கண் காணப்படுகின்ற ஒருசில செய்திகளை மட்டும் இவண் நோக்குவோம்:

'பேராசிரியர் சுந்தரனார் (மேலை நாட்டு) செகப்பிரியரைப் பின்பற்றியே தமது பாவியத்தில் Blank Verse என்னும் யாப்பமைதியைக் கையாண்டுள்ளார் என்பதோடு, தாமியற்றிய பாவியத்தைத் தமக்கு உதவி புரிந்த ஆங்கில அறிவு நூற் புலவரான பண்டாரகர் - கார்வித் துரையவர்கட்கே 'உரிமைப்படுத்தி வெளியிட்டுள்ளார் என்பதோடு, இலிடன் மேதகை (Lord Lyton) அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய 'கமுக்க வழி' என்ற கதையைத் தழுவித் தமிழ் மயமாக்கியதே மனோன்மணியம் என்றும், சுந்தரனார் மறைமலையடிகள், மாதவையா போன்றோர்கள் ஆங்கில ஆட்சியையே பெரிதும் பாராட்டியிருக்கின்றனரே யன்றி, அயல் நாட்டவரை எதிர்க்கவேண்டும் என்று கனவிலும் கருதியிருக்கமாட்டார்கள் (ஐயத்திற்குரியதே) என்றும், மேலும் மறைமலையடிகள் குறிப்பாக ஆங்கில ஆட்சியினை 'நம் ஆங்கில அரசு' என்றும், 'இந்நாட்டவரும் வட நாட்டவரும் ஒருங்கு குழுமித் தாமே தமது நாட்டை ஆட்சி புரிதல் கனவிலும் கை கூடாது' என்றும் கூறியிருப்பதாயும் குறிப்பிடப்படுவது இவண் நோக்கற்பாலது.

மேலும் சுந்தரனார் அவர்கள் 'சதுர்மறையா ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்' என்று தமிழை அவர் வியந்துள்ளதைக் கொண்டே திரு. தேவநேயப்பாவாணர், கா. அப்பாத்துரையார் போன்றோர்கள் தமிழேதான் உலகமொழிகளின் தாய் என்று தமிழுக்கு வீரவணக்கம் செய்வதற்கும்; பிற்காலத்தில் கா. சுப்பிரமணியப் பிள்ளை, மறைமலையடிகள், சிவராசப்பிள்ளை, இரா. பி. சேதுப் பிள்ளை, ஒளவை-துரைசாமிப்பிள்ளை, போன்ற பலரும் பிராமண எதிர்ப்பும், தமிழின் தூய்மையும் பேசினர் என்றால், அவர்களுக்கெல்லாம் வழிகாட்டி பேராசிரியர் சுந்தரனார் அவர்களே' என்று அன்னார் எழுதியிருப்பதும் தமிழர்கள் கவனிக்கவேண்டிய ஒன்றாகும்.

சுருக்கமாகக் கூறின் பேராசிரியர் சுந்தரனார் அவர்கள் மேலை நாட்டைத் தழுவியே புலவர்களிடையே படிக்கமட்டும் பயனுடையதாய் அவர் தம் நூலைப் படைத்திருப்பதோடு, பேராசிரியர் சுந்தரனாருக்கும், மறைமலையடிகட்கும் ஆங்கிலேயரிடமிருந்த பற்றும்

[ஆங்கில மோகம்] ஆரியர்களின் மேலிருந்த எதிர்ப்பும்தான் இதனுல் வெளியாகிறதே தவிர இவர்களுக்கிருந்த தமிழுணர்ச்சி தருக்கத்திற்கிடமாகின்றது' என உரைத்திருப்பதை நினைத்தாலே எரிகிறது! தமிழைப் பற்றி, தமிழர்களைப்பற்றி யார் வேண்டு மானுலும், எதை வேண்டுமானுலும் எழுதலாம் என்று நினைத்து விட்டார்கள் என்பது தான் இதன் பொருளா? அல்லது தூக்கம் விட்டு எழாத, தன்னைத்தானே மறந்து விட்ட தமிழர்கட்கும் போடப்படும் ஒரு சூட்டுக்கோலா? தனித்தன்மை கொண்ட தமிழன் பிணித்தன்மை கொண்டதுமேன்? அவர்களின் இத்தகைய அரை குறை ஆராய்ச்சிக்கெல்லாம் கரணியம் கால மயக்கமா? அல்லது கருத்து மயக்கம் தானு? என்னென்று சொல்வது?

மேற்போக்காக நோக்குவோர்க்குக் கூடப்புரியும்; ஆரியம் உலக வழக்கற்று விட்டதும், மனுநூல் என்பது தனிப்பட்ட இனத் தின் நன்மைக்காக எழுதப்பட்டது என்பதும், வரலாறு கூறும் வெளிப்படையான உண்மை என்று! மேலும் இன்னும் எவ்வளவோ இருப்பதோடு, 'ஓர் இலக்கியப் படைப்பாளியைப் பிறிதொருவர் முழு தும் உணர்ந்து முடிவு கட்டி விடுதல் என்பது இயலாத ஒன்ருகும்'. இந்நிலையில் இத்தகைய கட்டுரையாளர்களின் எண்ணம் தான் என்னவோ?! உருவத்தால் மாந்தன் என்றும், பெயரால் தமிழன்- என்றும் சொல்லிக் கொண்டு வாழ்கின்ற தமிழன் உண்மையான தமிழனுகத் திருந்துவது எந்த நாளோ? நினைத்தாலே எரிகிறது! தமிழர் நிலை !!

அர. பொன்வேலன், இறுதிநிலை-இளங்கலை வகுப்பு,
அரசு கலைக்கல்லூரி, திருமுதுகுன்றம், (விருத்தாசலம்)

ம. 118: மனேன்மணீய வாழ்த்தில் மறுவா?

பெருமதிப்பிற்குரிய தண்டமிழ்த் தலைவரீர்!

வணக்கம்! (விரோதிகிருது-ஆவணி-1971) மஞ்சரி என்னும் தமிழ்த் தொகுப்பிதழில் வையாபுரி வகையைச் சார்ந்த சென்னை மாநிலக் கல்லூரித்துணைத் தமிழ்ப் பேராசிரியர் மது. ச. விமலானந்தம் என்பவர் 'மனேன்மணீய வாழ்த்தில் ஒரு மறு' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை தீட்டியுள்ளார். அது குமரகுருபரன் (தமிழ் 15-6-71) திருவைகுண்டம் இதழிலிருந்து எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்

தது. தமிழைக் கொண்டு வயிறு வளர்க்கும் ஆரிய வெறியர் மனோன்மணீயத்தமிழ் வாழ்த்துப் பாடலைப்பற்றித் தம் அரைவேக்காட்டாராய்ச்சிக் கருத்துகளைக், கூறியதுடன் சுந்தரனார் பற்றியும் –அவர் தம் தமிழறிவை–தமிழ் வெறி எனவும் வசைபாடியுள்ளார். ‘ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா, என்னும் அடி பற்றித் தன்னுடைய ஆற்றாமையைக் கொட்டியுள்ளார். ஆரிய மொழியைத் தாழ்த்தி எழுதியது தவறென்பது அவர் தம் கருத்து. வாழ்த்தில் வைத்து வடமொழியை வீழ்த்தியது வளமையன்று. அது வாழ்த்தினையே குறையுடையதாக்கி விட்டது; கறையுடைய தாக்கி விட்டது என்பது அவர் தம் கருத்து. இந்தக் கட்டுரையைக் கண்டதும் திடுக்கிட்டேன். அதுவும் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் எழுதியது கண்டு துணுக்குற்றேன். வையாபுரி வகையைச் சார்ந்த இத்தகையோர் தம் வாயை அடக்க, தங்களைப் போன்ற தனித் தமிழ்ச் சான்றோர்களால் தான் இயலும். எனவே என் போன்றோர் எண்ணம் நிறைவு பெறத் தாங்கள் அக்கட்டுரைக்கு ஒரு மறுப்புரை தீட்டி வெளியிட்டு அத்தகை வடமொழி வெறியர்கட்குத் தக்க பாடம் புகட்ட வேண்டுகிறேன்.

—ஆ. ப. தொல்காப்பியன், பள்ளப்பட்டி, கரூர்.

ம. 119. தமிழரசா? வடமொழியரசா?

அன்புடையீர்,

வணக்கம்! தனித்தமிழ் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் நீங்கள். அதுபோல, தனித்தமிழ்ப் பேரறிஞர் பாவாணர் நற்றமிழ் உள்ளமும் வாழ்வும் கொண்டவர். உங்களைப் போன்ற தூய தமிழ்ப் பற்றுள்ளவர்கள் தமிழ்நாட்டில் பெருவாழ்வும் அமைதியும் கொண்டு வாழ இயலவில்லை. ஆனால் தமிழ்ப் பற்றுள்ள வர்போல் அடுக்குமொழி பேசி மக்களை மயக்கும் மாந்தர்களுக்கே தமிழகம் அடிமைப்பட்டுள்ளது. தமிழுக்காக, தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்து உயிர் ஈகம் செய்த வீரராக விளம்பரப் படுத்திக்கொள்ளும் முதலமைச்சர் மு. கருணாநிதியின் பெயரே தமிழில் இல்லை. அது போலவே சத்தியவாணிமுத்து, சாதிக் பாட்சா, எம். ஜி. ஆர்., அன்பில்-தர்மலிங்கம், இராமச்சந்திரன், ஓ. பி. ராமன் எல்லாப் பெயர்களும் வடமொழியே. ஆனால் தி. மு. க. மக்களிடம் கூறுவது யாது? தி. மு. க. தமிழ் நாட்டில் மொழிப்புரட்சி செய்தது. ‘கல்லக்குடி’ கொண்டு வந்தது. ‘Madras State’ தமிழ்

நாடாக்கியது எனத் தம்பட்டமடிப்பவர்கள்; ஏன் தத்தம் பெயர்களை மாற்றவில்லை? 200 ஆண்டுகளாகப் பழக்கத்திலிருந்த சொல் Madras என்பது. அதைத் தமிழ்நாடாக மாற்றியபோது தி. மு. க. வினர் ஏன் தமது பெயர்களை மாற்றக்கூடாது? தமிழ்ப் பெயரால் அரசியல் ஊதியம் பெற்று வாழ்கிறார்கள். நீங்கள் உண்மையுடன் உழைத்தும் உலகுக்குப் பெயர் தெரியவில்லை. 'தமிழரசு' என்ற இதழில் எத்துணையோ வடமொழிச் சொற்கள் உள்ளன. அதை நீக்க நீங்கள்தான் இடித்துரைத்து ஆசிரியவுரை எழுதவேண்டும். எடுத்துக்காட்டாக, டெண்டர்கள், சதவீதம், வினியோகம், சிகிச்சை, மிருகம், கார், சேவை, வயது, நிர்ணயிக்கப்படலாம், ஆமோதிக் காமல், தேசிய மில் துணி, ஜவுளி, ஜீவநதி, லோன், உச்சபட்சம் ஸ்தாபனம், யூரியா, வியாபாரிகள், அபகரி, விவசாயம், டெபாசிட், உன்னத, சாத்வீகம், சீசன், ஸ்டுடியோ, நவீன, சுயவிலாசம், கவர். கரண்ட் அக்கவுண்ட், சேவிங்ஸ் பேங் அக்கவுண்ட், சீசன் டெபாசிட், அநேகர், மத தர்மம், பரிசீலனை, நாசம், கஜானா, பங்களா காம்பவுண்டு, லாரி, ஸ்திரீ பெட்டி. நமூனா, நிபந்தனை, ரம்யமான, சுதந்திரம், தாலுக்கா, கிராமத்காம், பிரச்சனை, சகோதரன், வனத் துறை முதலிய பல வட மொழிச்சொற்கள் வருகின்றன. விளம்பரப் பகுதியில் தமிழ்க்கொலை செய்யப்படுகிறது. தென்மொழி தான் காப்பாற்றவேண்டும்.

—நா. காமாட்சியடியான், திருப்பூர்.

ம. 120 மருத்துவ நூற்களை மொழி பெயர்க்க.

ஐயா,

அரசு மருத்துவ, பொறியியல் நூற்களைத் தமிழாக்குவதில் முனைவு காட்டவில்லை. எனவே, தென்மொழி வழியாகத் தமிழுக்கு நிறைய ஆற்றமுடியும் என்று நம்பும் யான், கீழ்க்காணும் திட்டத்தைத் தங்கள் அருள்பார்வைக்கு விடுக்கின்றேன். அதனைச் செப்பம் செய்து, முழுமைபெற்ற திட்டமாகத் தென்மொழியில், இயன்றால் வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

உடற்கூறு (Gray's Anatomy) நூல் 1600 பக்கங்களை கொண்டது. பல ஆங்கில நூற்கள் (Pathology, Anderson போன்றவை) தோராயமாக 35 (அ) 40 பெயர்களைக் கொடுப்பாசிரியர்களாகவும் (Contributors), ஒருவர் அல்லது இருவரைத் தொகுப்-

பாசிரியராகவும் (Editor) கொண்டு எழுதப்பெற்று வருகின்றன. அம்முறையில், மருத்துவ நூற்களையும் பொறியியல் நூற்களையும் தமிழாக்கல் எளிது. ஒருவருக்கு 40பக்கம் மேனி, 40பேருக்கு, 1600 பக்கங்களைப் பிரித்தளித்து, மொழி பெயர்க்கச் செய்யின், 40 பக்கங்களை ஒருவர் ஒரு மாதத்தில் முடித்துவிட இயலும் ஆதலின் முழுப் பொத்தகத்தையும் ஒரு மாதத்தில் எழுதி முடித்து விடலாம். அடுத்த ஒரு மாதத்திலோ அன்றி இருமாதத்திலோ, தொகுப்பாசிரியர் அவற்றைக் கோவைப்படுத்தியும், வெவ்வேறு கலைச்சொற்களைத் திட்டவட்டமாக்கியும் (சான்றுக, Radius bone ஐ ஆரை எலும்பு, கதிரையெலும்பு, கதிரெலும்பு, கதிரியெலும்பு என மொழி பெயர்த்திருப்பனவற்றுள், நன்குகவும், சுருக்கமாகவும், அழகாகவும் இருக்கும் ஒரு கலைச்சொல்லைத் திட்டவட்டப் படுத்தல்) நூலை முழுமை செய்து விட முடியும். இரண்டு (அ) மூன்று மாதங்களுள் ஒரு நூல் எழுதி முடித்துவிட்டால், அடுத்தடுத்துப்பிற மருத்துவநூற்களை மிகஎளிதிலும், விரைவிலும், வெளிக்கொணர முடியும். இனி, இந்நாற்பதின்மரும் மருத்துவர்களாக இருக்கவேண்டும். தென்மொழியோடு தொடர்புள்ள மருத்துவ மாணவர்களும், மருத்துவர்களும், தமக்குத் தெரிந்த, தென்மொழியை அறியாத, ஆனால் தமிழ்ப்பற்று உடைய மற்ற மருத்துவ மாணவர்களையும், ஆசிரியரையும், மருத்துவரையும், இப்பணியில் ஈடுபடுத்தி இவ்வாறுக நாற்பது மருத்து(மாண)வர்களைச் சேர்க்க இயலும். தென்மொழியோடு நன்கு தொடர்புடைய பாவாணர் நூற்களைக் கற்று மொழிநூலை நன்கறிந்த, ஒருவரை பதிப்பாசிரியராக (Editor) பொறுப்பேற்று நூலைச்செப்பமுறச்செய்ய வியலும். இவற்றைத் தங்களால் செய்யமுடியும் என்ற நம்பிக்கையில் இதனை எழுதுகிறேன். இதனைச் செப்பமுற்றதிட்டமாக்கித் தென்மொழியில் வெளியிட வேண்டுமென்று இறைஞ்சுகிறேன். முதலில் கிரேயின் உடற்கூறு (Gray's Anatomy) முப்பத்துநான்காம் பதிப்பு (Thirty fourth Edition) என்ற ஏறக்குறைய 1600பக்கங்கள் கொண்ட நூலை இத்திட்டப்படி தமிழ்ப்படுத்த முனைதல் நன்று. பொறியியலுக்கும் இத்திட்டத்தைக் கையாளலாம். எல்லா நூற்களையும் நம்மால் வெளிக்கொணர முடியாவிட்டாலும், முதல் நூலாக ஒரு பெரும் அறிவியல் நூலை வெளிக்கொணர்ந்து தமிழகத்திற்கும் தமிழக அரசிற்கும் வழி காட்டியாக விளங்குவோம் என்று மன்றுடுகிறேன் 40 பக்கங்களை மொழிபெயர்க்க வேண்டிய தாள்களை அவ்வவ் வாசிரியர்களே வாங்கிக் கொள்வது அரிய செயலன்று. 40பேருக்

கும் தேவையான 40 உடற்கூற்று நூற்களேயும் அவரவர்களே தங்கள் கல்லூரியின் நூலகத்திலோ, படிக்கும் மாணவர்களிடமோ நண்பர்களிடமோ இரவலாகப் பெறுதல் கூடுவதே. இதனுல் உருவாக்கச் செலவு மிகுதி இராது. ஆயின், வெளியீட்டுக்கான செலவே இங்குக் கவனிக்கத் தக்கது. உருவாக்கி விட்டோம் என்ருல் அல்லது உருவாக்க முனேந்துள்ளோம் என்ருல், தனித்தமிழர்கள் வெளியீட்டுக்கான பொருளேத் தர அணியமாய் இருப்பார்கள். அவர்களே அவ்வாறு தரச் செய்யத் தங்களால் இயலும் என்று நம்புகிறேன். கிரே உடற்கூற்று நூல் ஒன்று 120 உருபா விலேயாகும். உருவாக்க விலே உருபா 80 இருக்கும். எனவே 100 பொத்தகங்களே வெளிக்கொணர உருபா 8000 போதுமானது. தங்களால் இச்செயல் இயலும் என்ற பெருநம்பிக்கையில், என்னுடைய சிறு எண்ணத்தை வெளியிட்டேன். அருள் கூர்ந்து, இத்திட்டத்தை முழுமை செய்து, தென்மொழியில் வெளியிட வேண்டுகிறேன்.

—கி. அரிமா மகிழ்கோ, புதுவை-5.

ம. 121. 'தென்மொழி'யால் என்ன பயன்?

பேரன்பு கெழுமிய பாவலரே, வணக்கம்.

நம் நாடு தமிழ்நாடு. இந்நாட்டில் செந்தமிழ் உலவிடவேண்டும். நினேவும், சொல்லும், செயலும் நற்றமிழில் நடைபெறல் வேண்டும் என்ற கொள்கை இக்கால் எப்படி உள்ளது என்று ஆய்ந்து பார்ப்போம். தமிழ்நாடு தமிழர்களுக்கே உரிமையாக வேண்டும். வடவர்களுக்கு நமது "மாண்புமிகு'' செந்தமிழர்கள் அடிமைகளாக இருக்கக்கூடாது. செந்தமிழ் மறவர்களுக்கு விடுதலே உணர்ச்சி வேண்டும். பொருளியல் துறையில் தமிழகம் வடநாட்டுச் சேட்டுகளாலும் பிறமாநிலத்தவராலும் சுரண்டப்படக் கூடாது. இன்று தமிழ் நாட்டில் பல்வேறு துறைகளில் எடுத்துக்காட்டாக தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம், இன்னும் பிற பெரிய பதவிகள் உள்ள துறைகளில் எல்லாம் பிற மாநிலத்தவர்களே வீற்றிருக்கிருர்கள். தமிழர்கள் விழிபிதுங்கி வேலேயின்றி அலேகிருர்கள். இன்னும் மூழு அளவில் கல்வித்துறையில், வேலே வாய்ப்பகத்தில், வட்ட அலுவலகங்களில், மாவட்ட ஆட்சித்தலேவர் அலுவலகத்தில், வேளாண்மைத் துறையில் தமிழ் பயன்படுத்தப்படவே இல்லே.

தென்மொழி கடந்த பல்லாண்டுகள் தனித்தமிழுணர்ச்சியைத் தன்னலமறுப்புடன் பரப்பி வருகிறது. உண்மையான தொண்டு செய்யும் உயர்ந்த செந்தமிழ் ஏடு தென்மொழி ஒன்று என்பதை எவனும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட இந்தப் பைந்தமிழ் இதழைத் தமிழக அரசு தமிழகங்களில் உள்ள நூல் நிலையங்களில் ஏன் வருவித்து மக்களுக்குக் கொடுக்கக்கூடாது? தமிழுக்காக உயிரையும் தரத் தயங்கமாட்டோம் என்று வாய்ப்பறை அடிப்பது மட்டும் போதுமா? உடனடியாகத் தமிழக அமைச்சர்கள் தமிழக மெங்குமுள்ள நூல் நிலையங்களில், கிளை நூலகங்கள் எங்கும் இத் தகைய இதழ்களைப் போடக் கட்டளையிட வேண்டும்.

தமிழகத்தில் வெளிவரும் ஒருசில இதழ்களைப் படித்து அதில் வரும் சொற்களை ஆராய்ந்தேன். இன்னும் கலப்பு நடைத்தமிழும் பிழையும் கலந்தே தமிழ்க்கொலை செய்யப்பட்டு வருகிறது.

மந்திரி, ராஷ்டிரபதி, பிரதமர், பிரச்னைகள், விஜயம், சாதனை, அம்சங்கள், சமாதானம், மசோதா, ஸ்தாபனம், சாஸனம், ராஜாங்க காரியதரிசி, அபிப்ராயம், ஆக்கிரமிப்பு, பிரச்சாரம், அபிலாஷைகள், ராஜீய சம்பந்தம், ஜாக்கிரதை, யூனியன் சர்க்கார். ராணுவம், சாத்தியம், பந்தோபஸ்து, சிருஷ்டித்து, பிரதேசம். வாதிக்கக்கூடும், ராஜீயப் பைசல், வாபஸ், கவுன்சில், கம்யூனிஸ்ட், பிரேரணைகள், விவகாரம், ஆயுதம், சர்வதேசப் பிரச்சினை, உஷாராக, உபகாரம், ரோட்டரி கிளப், ஸ்தலக் கல்லூரி, சேவாசங்கம், ஆர். டி. ஓ., கலெக்டர், ஏகமனதாக, கமிஷனர், மினிட் புத்தகம், விஷயம், அமல், உத்திரவு, நிர்பந்தம், சமதர்மம் அங்கீகாரம், பிராந்தியம், சேனை, கரகோஷம், மோசம், ஆஸ்பத்திரி, வார்டு, சர்வகலா-சாலை உப அத்யட்சகர், உத்தேசம், அப்பீல், பிரமுகர், சந்தா, நிர்வாகி, சதவிகிதம், பஞ்சப்படி, காராக்கிருகம், நிருபர், அத்தாட்சிக் கார்டுகள், ஜனாதிபதி, அத்தியாவசியமான, உற்பத்தி, ஏஜண்ட், மேனேஜர், தேசிய சம்மேளனம், சமூகம், ஏகபோக ஆதிக்கம், நிர்ணயம், பிரதான காரணம், அதிகார வர்க்கம், பிரகடனம், மத்தியப் பிரதேசம், கமிஷன், கோஷங்கள், துரதிர்ஷ்டவசமாக, கஷ்டம், கிராக்கிப்படி, சமரசம், தேசிய ரீதியான, நிவாரணம், அந்நியக்கம்பெனி, நபர், பலவீனம், தாவாக்கள், போலீஸ், பாத்திரம், திருப்திகரம், ஜனநாயக

சோசலிசம், ஜனசக்தி, ஆலோசனை, சர்வீஸ், கேவலம், ஜீவன அலவன்ஸ், நேயர்கள், கிராமம், நிலப்பிரபு, சுதந்திர தினம், தத்துவார்த்தம், பிரசுரங்கள், பெட்ரோல் பங்க், கேந்திரம், டிரக், பரிசீலனை, உத்திரவாதம், மிருகங்கள், ஸ்டீல் கார்ப்பரேஷன், பரஸ்பர விவாதம், அனுபவம், ஸ்தம்பித்து, ஏகாதிபத்தியம், நிரூபிக்கவும், ஆசை, பூர்ஷ்வாக்கள், நிராகரித்தல், நியாயம், ரெடிமேடு, சிகரெட், ராஜபவன், ராஷ்டிரபதி பவன், ஸ்திரமாக, சம்பவம், சமர்ப்பித்தார், அட்ஜீடிகேஷன், நாசம், இன்ஸ்டிடியூட், கிராக்கிப்படி, ஸ்டுடியோ, டெலி:.போன், சுப்ரீம் கோர்ட், விசாரணை, ஆரம்பம், ஜோதீ, ஆபாசம், யுகம், தர்மம், காரியம், தாசி, விபச்சாரி, பலாத்காரம், சிலாசாசனம் அர்த்த ஜாமம், ரகளை, சம்சார சாகரம், பரிசுத்தம், ரத்து, பிரதிகள், வாதி, பிரதிவாதி, பிராமிஸ்ஸரி நோட், சுயமரியாதை பிரச்சார ஸ்தாபனம், அனுதாபம், ஆச்சரியம், ஜென்மசாபல்யம், மாயாஜாலம், மந்திரஜாலம், ராசிபலன், மகிமை, விஞ்ஞானம், நேயர் விமரிசனம், அத்தியாயம், சௌந்தர்யம், தினசரி, கேசம்.

இப்படிப் பல வடமொழிச் சொற்களும், பிற மொழிச் சொற்களும் தினமணி, தீக்கதிர், ஜனசக்தி, ஆனந்த விகடன், விடுதலை இதழ்களிலிருந்து, எடுத்து எழுதியுள்ளேன். இப்படிப்பட்ட தமிழ் தான் நாட்டில் உலவுகிறது. எனவே தென்மொழி இத்தனை ஆண்டுகள் செய்த பணி இன்னும் முடியவில்லை, நம் தென்மொழிக்கு மிகுந்த வேலை உள்ளது. பகைவர்கள் மிகுதி. எனவே, முடுக்கமாக உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள தென்மொழி சுவைஞன்,
தி. நா. அறிவரசு, திருப்பூர்.

நினைவில் வையுங்கள்

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடு.

இன்றே உறுப்பினராகுங்கள்.

பூஞ்சோலை

ஆசிரியர்: காரை-இறையடியான், காரை-அழகன்

ஆண்டுக் கட்டணம் 3 உருபா. தனிஇதழ் விலை 25 காசு.

பூஞ்சோலை, காரைக்கால்-1.

நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

(துரை-மாணிக்கம்)

பாட்டு ௨௧

கூழினும் புளித்தோ உப்பினும் உவர்த்தோ
காழ்த்த சுள்ளிக் காயினுங் கார்த்தோ
கரும்புகை முருட்டின் மழைநீ ரொழுக
இருட்படை புகுந்தநம் இல்லினும் மைத்தோ
பனங்கனிப் பறட்டைப் பையல் சிணுங்க
நனைவிழி கலுழும் மனைநின் மேனி
வறளினுந் தேய்வினும் பாழ்த்தோ
மறலியின் குறிக்கை மாட்டுநற் சாவே!

பொழிப்பு:- நாம் அருந்தும் கூழை விடப் புளித்ததோ? அதற்கிடும் உப்பை விட உவர்த்ததோ? அக்கூழை யருந்துகையில் நாம் இடையிடையே கடித்துக் கொள்ளும் விதைமுற்றிய மிளகாயினும் கார்ப்பு உடையதோ? பச்சைச் சுள்ளிகளையும் காட்டுச் சருகுகளையும் போட்டுக் கொளுத்துதலால் எழுகின்ற கரும் புகைசூழ்ந்து கருமையேறியதும், முருடு நிறைந்ததும், மழைநீர் ஒழுக்கு உடையதும், இருள் தன் படையுடன் வந்து புகுந்து கொண்டதுமாகிய நம் வீட்டை விடக் கருமை நிறைந்ததோ? பனம்பழத்தினைச் சூப்பியெறிந்தது போலும், பறட்டைத் தலையுடன் விளங்கும் நம் பையன் பசிக்காக நின்பால் சிணுங்கியழ, நனைந்த விழிகள் வடிக்கின்ற நீரையுடைய மனைவியே! நின் மேனியின் வறட்சியையும் தேய்வையும் விடக் கொடுமையானதோ, உயிரைப் பிரிக்கும் கொடியவனின் குறி தப்பாத கை நம்மைப் பற்றியிழுக்கின்ற சாவு?

விரிப்பு:-இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

வறுமையால் துன்புற்ற ஒருவன் தன் மனைவியிடம் தம்மை வருத்துகின்ற துயரங்களைவிட உயிரை உடலினின்று பிரிக்கின்ற சாவு கொடுமையானதன்று என வெம்பிக் கூறியதாகும் இப்பாட்டு.

'நாம் அருந்துகின்ற கூழே மிகப் பழையது; கடுமையான புளிப்பு வாய்ந்தது அதனை விடவோ சாவு புளிப்புடையதாக விருக்கும்? இருக்கவே இருக்காது' என்றும்;

'கூழ் சிறிதாயினும் உப்புச்சுவை தவிர வேறு அதற்கு ஊட்டப் பெருமல் அருந்துவதால், அதன் உவர்ப்பு மிகுந்திருப்பது போல் உள்ளதே, அதனினும் சாவு உவர்ப்புடையதாக இருக்குமோ? இருக்கவே இருக்காது' என்றும்;

'கூழுக்காக நாம் கடித்துக் கொள்ளுகின்ற மூற்றிய விதைகளை யுடைய மிளகாயின் காரச்சுவையை விடவா அது கடுமை நிறைந்ததாக இருந்துவிடும்? இருக்கவே இருக்காது' என்றும்;

'நெடுங்காலமாய் நாம் அவ்வப்பொழுது கூழைக் காய்ச்சுவதற்கென்று போட்டு எரிக்கின்ற பச்சைச் சுள்ளிகளாலும், காட்டுச் சருகுகளாலும் அடர்த்து எழுகின்ற கரிய புகை முருடு முருடான சுவரிலும் தரையிலும் தோய்தலாலும், அவற்றின் மேல் மழை நீர் ஒழுகி யிறுகியதாலும், இருளே தன் படையுடன் புகுந்துகிடப்பதைப் போல் உள்ள நம் குடிலை விட நமக்கு வந்து வாய்க்கும் சாவு கருமை நிறைந்ததாக விருக்குமோ? இருக்கவே இருக்காது' என்றும்;

'பனம்பழத்தைச் சுட்டுச் சூப்பியெறிந்த கொட்டையைப்போல் பிசுக்குற்றும் பறந்தும் வெளிறியும் உள்ள தலையையுடைய நம் பையன் பசிக்காக நின்பால் மெல்லிய ஆற்றலுடன் ஒட்டிக் கிடக்க, நனைந்த விழிகளினிறு கழல்கின்ற நீரையுடைய மனைவியே, நின் மேனியின் வறட்சியையும் தேய்வையும் விடக் கொடுமையதாக இருக்குமோ, நம்மை வந்தணையவிருக்கும் சாவு? இருக்கவே இருக்காது' என்றும்;

தலைவன் ஒருவன் வறுமையின் கொடுமையைத் தாளாது கசிந்து கூறினன் என்க.

கூழினும் புளித்தோ:- நாம் அருந்தும் கூழைவிடப் புளிக்குமோ? குழைதலால் கூழ் எனப்பெற்றது. தொடக்கத்தில் குழைய வைத்த கூழ் வகைகளையே உணவாகக் கொண்டமையால் கூழ் எனும் சொல் உணவு என்னும் பொருள் பெற்ற தென்க. கூழ் பழைய தாக ஆக மிகவும் புளிக்குமாகையால், பழைய கூழையே சிறிது

சிறிதாகத் தொடர்ந்து அருந்தி வருவது அறியப் பெறுகிறது என்க.

உப்பினும் உவர்த்தோ:- உப்பை விட உவர்ப்புச் சுவையுடையதோ?

'உப்பை விட உவர்ப்பது ஒன்றில்லை யாதலால் அதையே சுவைத்துக் கொண்டிருக்கும் நமக்கு அச்சுவை மிகவும் பழகிப் போய்விட்டது. சாவு அதை விடவா உவர்க்கும்?' என்று வினவினான் என்க.

கூழ் சிறிதாக விருப்பதால் உப்பின் உவர்ப்பை அவர்கள் மிகுதியாகச் சுவைக்க வேண்டியிருந்ததென்க.

காழ்த்த சுள்ளிக்காய்: நன்கு முற்றிய மிளகாய்.

கார்த்தோ: கார்ப்பு உடையதோ.

கரும்புகை... ஒழுக: கரிய புகை சூழ்ந்து கருத்துள்ள சுவர் முருடுகளில் மழை நீர் ஒழுகியிருக்க

சுவர்களும் தரையும் ஒழுங்கற்று முருடு முருடாக இருக்கின்றன. அம்முருடுகள் கரிய புகைகள் சூழ்தலால் கருமையேறி யிருக்கின்றன. அவற்றின் மேல் மழை நீர் ஒழுகி அக்கருமையை நனைத்து மேலும் கருமையுடையதாகத் தோன்றுகின்றது. இந்நிலையில் இருள்வேறு தன் படையுடன் வந்து அக்குடிலுட் புகுந்துள்ளதென்க.

இருட்படை புகுந்த நம் இல்லினும் மைத்தோ: 'இருள் தன்படையுடன் குடி புகுந்த நம் இல்லத்தை விட, நமக்கு வந்து வாய்க்கும் சாவு இருண்மை உடையதோ' என்றான் என்க.

புகையால் கருமை நிறமேறிய சுவர்களில் ஒளி பாய்ந்தாலும் ஒளிர வழியில்லை. சுவர் முருடுகளின்றி யிருந்தாலோ ஒருவாறு ஒளி பாய வழியுண்டு. அதுவோ மேடும் பள்ளமுமாய் முருடுகள் நிறைந்துள்ளது. எனவே இருள் தவிர ஒளி சூழ்வதற்கு வழியே இல்லை என்க.

பனங்கனிப் பறட்டைப் பையல்: பனம்பழத்தினைச் சூப்பியெறிந்தது போல் பிசுக்கும், வெளுப்பும், பறக்கையுமுடைய தலையைக் கொண்ட பையன்.

சிணுங்குதல்: மெலிதாக ஆனால் தொடர்ந்து அரற்றி யழுதல்.

நனைவிழி கலுழும் மனை: நனைந்துள்ள விழிகளினின்று ஒழுகுகின்ற கண்ணீரையுடைய மனைவியே!

நின்மேனி.......பாழ்த்தோ: நின்னுடைய மேனியின் வறட்சியையும் சீர்கேட்டையும் விடக் கொடியதோ.

மறலி: உடலினின்று உயிரைப் பிரிப்பதாக கருதப்பெறும் காலன்.

மறல்: கொடுமை, மறலி; கொடியவன்.

காலம்: உடலினின்று உயிர் பிரியும் நேரம். காலன்: அந்நேரத்திற் குரியதாகக் கருதப்பெறும் ஓர் உருவகத் தோற்றம்.

காலம் செய்யும் கொடுமை; அவன் பேச்சு என்னைக் கொன்றது அவள் நினைவு என்னைத் தடுத்தது என்னும் தொடர்களில் காலம், பேச்சு, நினைவு ஆகிய அஃறிணைப் பெயர்கள் உயர்திணைப் பெயர்கள் போல் உருவகிக்கப் படுவதைப்போன்றது இறப்பு. எனவே அவ்வினைக் குரியவனாக ஒருவன் கற்பிக்கப் பெற்றான்.

குறிக்கை: குறி கொண்ட கை.

மாட்டுநற் சாவு: நம்மைத் தப்பாது மாட்டி இறப்பிக்கும் இனிய சாவு

வறுமைத் துன்பத்தினும் சாத்துன்பம் பெரிதாகத் தோன்ற வில்லை என்பது மட்டுமின்றி, இனியதும் கூட என்று கூறுவான் வேண்டி நற்சாவு எனப் பாராட்டிப் பேசினான் என்க. இதனால் வறுமையின் கொடுமை நன்கு உணர்த்தப் பெற்றது.

ஏழ்மையுற்றவரின் வாழ்வுப் போராட்டத்தையும் அவர்தம் துயரச் சூழலையும் எடுத்துக் கூறுவதாகும் இப்பாடல்.

இது பொதுவியலென் திணையும் முதுகாஞ்சி யென் துறையுமாம்.

நாடகக்கலை

(நாடகத் துறைக்கென்றே வெளிவரும் மாத இதழ்)

சிறப்பாசிரியர்:- ஆறு. அழகப்பன், M. A., M. Lt.

உறுப்பினர் கட்டணம்:—

ஆண்டுக் கட்டணம் உரு. 6—00

வாழ்நாள் கட்டணம் உரு. 100—00

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :—

மேலாளர்,

நாடகக் கலை

202, சானி சான் கான் தெரு, சென்னை-14.

கருத்தை மாற்றுவீர் புலவர்களே!

—பெருஞ்சித்திரன்—

காலம் மாறியது; காட்சி மாறியது;
கருத்தை மாற்றுவீர் புலவர்களே!—தமிழ்ப்
புலவர்களே!—புதுக்
கோலம் புனைந்ததிவ் வுலகம்! ஆகவே
கொள்கை புதுக்குவீர் புலவர்களே!

இராமா யணத்தையும் வில்லிபா ரதத்தையும்
எத்தனை யாண்டுகள் எடுத்துரைப்பீர்?—நலம்
தடுத்துரைப்பீர்?—உயர்(வு)
இராமல் நசிந்திடும் தமிழின மக்களுக்
கென்றுமுன் னேற்றத்தைத் தொடுத்துரைப்பீர்?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாகவே
ஆரியம்-தமிழ்-எனக் கலந்துரைத்தீர் - மொழி
நலங்குறைத்தீர் - இன்று
பாயிரம் பாடினோம் தனித்தமிழ்க் கே,நல்ல
பாவியம் பாடியே வளங்குவிப்பீர்!

புதுப்புது இலக்கியம் செய்தளிப் பீர்;பழம்
பூழ்க்கை இலக்கியம் கைவிடுவீர்! - இனி
மெய்நடுவீர்! - ஒரு
பொதுப்படை யானநல் லுலகம் மலர்ந்தது;
பொதுமை இலக்கியம் செய்திடுவீர்!

அரசர் கதைகளும் அழகியர் கதைகளும்
அறிவையும் உயர்வையும் வீழ்த்தினவாம்!-நமைத்
தாழ்த்தினவாம்!-புது
முரசறை விப்பீர் தமிழ்ப்புல வீர்!இனி
முகிழ்த்திடும் அறிவியல் வாழ்த்திடவே!

குலமும் சமயமும் கொண்டு பிளந்திடும்
குமுகா யத்தினை மாற்றிடுவோம்!-பொது
நாற்றிடுவோம்!-உயிர்
நலமும் வாழ்க்கையும் மாந்தரெல் லார்க்கும்
நடுவெனும் நயன்முறை சாற்றிடுவோம்!

தமிழகத் தமிழாசிரியர் கழக 13-ஆம் மாநில மாநாட்டு மலர்க்கென
எழுதி விடுத்தது.

இலக்கியத்தைச் சுவைத்து இன்புற...!

த. முத்துக்குமரன் க. இ.

இன்ப வாழ்வே யாவரும் இயல்பாய் விரும்புவது. எனவே இன்ப ஆக்கத்திலும் துன்ப நீக்கத்திலும் நாட்டங் கொள்வதும் இயல்பே. இன்புற்றிருப்பதற்கான வழிகளில் சாலச் சிறந்தது இலக்கியம் என்பர். இலக்கிய நூற்களைப் படித்துச், சுவைத்து, இன்புறுவதெப்படி யெனத் தொட்டுக்காட்ட எழுந்ததே இக் கட்டுரை.

இதுதானும் இயலுமா என்பதுவும் ஐயமே. காரணம் இலக்கியம் இன்னதென விளக்க எழுந்த நூற்கள் பல. இவை தரும் கூறுகளை ஒருங்கிணைத்து, நிழற்படக் காட்சியெனத் தந்தால், பூத்துக் குலுங்கும் மரத்தின்கீழ் உதிர்ந்து உலர்ந்த இலைகளையும் காணநேரும். வேண்டாத இவை போன்றவற்றை நீக்கிக் கண் கவர் காட்சிதரும் ஓவியத்தை யொப்ப ஒரு சில கூறுகளைத் தீட்ட முயலுவேன்.

இலக்கணம், இலக்கியம் ஆகிய இருசொற்களைத் தொன்று தொட்டே தமிழில் வழங்கி வருவன. இவற்றில் வேர்ச்சொல் இலக்கு. இலக்கு என்பது குறி, குறிக்கோள். எனவே, 'சிறந்த வாழ்க்கைக் குறிக்கோளான அறத்தை எடுத்துக் கூறுவது இலக்-கியம்' என்பதே மொழியியலறிஞர் தேவநேயப் பாவாணர் தரும் விளக்கம். சிறந்த வாழ்க்கையை எடுத்துக் காட்ட, மனக்கோட்டம் நீக்கும் மாண்பும் உறுதிப் பொருள் பயத்தலும் தேவை என்ருகும். இதுவே நல் இலக்கியத்திற்கான உரைகல்.

இதனைக் கருத்தில் கொண்டு காணின், 'கல்வி கரையில' என்ற தொடரைக் 'கல்வி கரையுள' எனத் திருத்தும் துணிவு கூட எழலாம். காரணம், இன்று வெளிவரும் நூற்களில் பெரும் பாலானவை மாந்தர் மனக்கோட்டம் நீக்குவதற்கு மாருக, அதனை ஆக்குவன, வாழ்க்கையைக் கறைப்படுத்தி, மக்களை மாக்களாக்கு வன. வாழ்வாங்கு வாழ வழிவகுக்க உதவாதன.

'கல்வி கரையில' என்றவிடத்து, 'கல்வி' நூற் பரப்பினைக் குறிக்கும். இந்நூற்கள் மாந்தன் விரும்பும் பொருளினை உட்

கொண்டு, ஆளும் முறையால், சொல்லும் விதத்தால் படிப்போரின் உள்ளுணர்வைத் தூண்டி இன்புறச் செய்ய வல்லனவாய் இருத்தல் வேண்டும். ஒரு நல்ல நூல் வாழ்விலே பிறப்பது; வாழ்விற் கண்டனவற்றைப் பார்த்தனவற்றைச் சிறந்த, நிலையான பயனை விளக்கும் வகையில், என்றென்றும் இருக்க எழுத்தில் வடித்துக் கொடுப்பதாகும். எனவே, அது நல்வாழ்வின் சொல்லோவியம்.

இலக்கியத்தின் பின்னணியில் அமையும் சில கூறுகளும் உள. நாம் நினைப்பதைக், கண்டதை, அறிந்ததை உணர்ந்ததைப் பிறருக்குச் சொல்ல, நமக்குள்ள துடிப்பின் அடிப்படையில் எழுவனவே கருத்துரை, உணர்வோவியம், கட்டுரை, இரங்கற்பா, வாயுறை வாழ்த்து, போன்றன. மக்கள் வாழ்வில் இருபாலரின் உறவில், செயலில், நடை யுடை பாவனைகளில், விருப்பு வெறுப்பு களில் நமக்குள்ள அக்கறையின் அடிப்படையில் எழுவதே இயல், இசை, நாடகம். பார்த்ததைப் பார்த்த வண்ணமே, முழுமையாகச் செம்மையாகப் பிறருக்கு எடுத்தியம்புவதில் நமக்கொரு தணியாத ஆர்வம். இதினின்றெழுவதே வண்ணனை. சொல்லுங்கால், கலை யுணர்வுள்ளவிடத்து, சுவைபட, அழகுறச் சொல்ல ஓராசை. இதனால் வருவது நடை. இவ்வாறு கூடி வாழும் இயல்பால், நாம் கண்டதைக், கேட்டதைக், கருதியதை, நம்மைச் சுற்றியுள்ளவர்களோடு பரிமாறிக் கொள்ள ஏற்றவழிகளாக இவ்விலக்கியப் பிரிவுகள் இயல்பாயமையக் காண்கிறோம்.

இலக்கியப் பிரிவுகள் அனைத்திலும் இழையாகக் காணப்படும் வேறு சில கூறுகளும் உள. முதலில் பாவாக அமைவது உலக வாழ்க்கை; ஏனெனில் இலக்கியம், வாழ்விலே பிறந்து, வாழ்விலே வளர்ந்து, வாழ்விற்கென வாழ்வது. எனவே இலக்கியத்தின் கனிப் பொருள் இல்லற வாழ்வு. எந்த இலக்கியப் பிரிவும்-பாட்டு கட்டுரை, சிறுகதை, தொடர்கதை, நாடகம் எதுவும் - உலக வாழ்வையே அடித்தளமாக் கொண்டது. இக்கனிப் பொருள் பொது. அதனை இலக்கியக் கலைஞன் தன் தொழிற்சாலையில், கல்வி, அறிவு' கற்பனை ஆகிய நுண் கருவிகளால் உருவாக்கி வெளியிடும்போது தன் இனத்தைக் காட்டி விடுகிறான். அவன் நடையிலிருந்தே அவனுடைய ஆசான், அவன் பயின்ற நூற்கள், அவன் சுற்றம் கொள்கை, குறிக்கோள் ஆகியவற்றை நாம் எளிதில் அறியலாம்.

'மனத்தின் நிறைவினுல் வாய் பேசும்' என்பது விவிலியம். பேச்சே நூலின் எழுத்து நடையாக மாறுவது. ஒரு நூலைப் படிக்கும்போது அதன் ஆசிரியர் நம்முன் பருவுடலில் இல்லையென்றாலும் அச்சடித்த பக்க வாயிலாகப் பேசுவது அவரே தான். அவர் நூலிலுள்ள ஒவ்வொரு சொல்லும் அளவுகோலாயமைய, அவர் இயல்பு இன்னதென நாமறிவது எளிது. ஒரு சொற்றொடரை அல்லது பழமொழியைக் கேட்ட அளவிலே, கேட்போர், 'இஃது இன்னார் சொன்னது' எனச் சொல்ல நம்மில் பலரும் கேட்டிருக்கிறோம்.

ஒரு நல்ல நூல் அதன் ஆசிரியரின் அறிவில், உள்ளத்திலிருந்து பிறப்பது. அதில் அவர் தம்மியல்பைத் தனித்தன்மையைத், தம் வாழ்வின் செம்பாதியை அப்படியே கொட்டிவிடுகிறார். அதன் பெருமை அவர் தம் பெருமையைப் பொறுத்தது. வாழ்வில் அவர் கண்ட புதுமையைத் தம் கோணத்தில் நின்று பிறர் காணும் வகையில், அவருள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் சொல்லுகிறார். ஆடுதுறை மேய்ப்பன், மூலன் என்பான், உயிர் நீத்ததறிந்த ஆவினம் இரையெடுப்பதை விடுத்துக் கதறி நின்றன. அக்காட்சியை அவ்வழி நடந்த முனிவர் ஒருவர் கண்டார். கண்டவர் தம் தவ வலியால், தம் பருவுடலைப் புறத்தே வைத்து, அந்த மூலன் உடலில் புகுந்து, தூக்கம் நீங்கி எழுவது போல், திருமூலராக எழுந்து ஆக்களின் துயர் துடைத்தார். அவ்வருஞ் செயல் ''அறிவினுல் ஆகுவதுண்டோ'' என்று இலக்கணம் வகுத்த குறளுக்கு வாய்த்ததோர் அரிய இலக்கியமன்றோ ?

எழுத்தாளர் ஒவ்வொருவரும் தத்தம் காலப்படைப்பே. அதே போல் நல்ல எழுத்தாளர் அவர் தம் காலத்தைப் படைக்கிறார். அடிமைத் தளையால் துயருற்ற தமிழகம் இரு பாவலரைப் படைக்க, தேசிய பாவலர் பாரதி விடுதலைப் போர் முரசும், பாவேந்தர் பாரதிதாசன் குமுகாய விடுதலைப் போர் முரசும் கொட்டினர். சூழற் படைப்பிலும், எழுத்தாளரின் தனித்தன்மை ஒளிவிடக் காணலாம். வால்மீகி எழுதியதைத் தழுவி எழுந்த இராம காதையில் தமிழ்ப் பண்பும் தமிழ் நாட்டுப் படப்பிடிப்பும் கம்பர் தரக் காணலாம்.

இலக்கியப் படிப்பு ஓர் உளங்கவர் சுற்றுலாவை யொத்தது. பல நாட்டு நூற்களைக் காணும்போது அந்நாட்டு மக்களோடு அவ

வளாவும் ஓர் உணர்வு அவர்களின் வாழ்க்கை, மனநிலைகளில் நல்லன, அல்லன கண்டு, நல்லன கொண்டு, அல்லன விடுத்து, வாழ ஒரு நல்ல வாய்ப்பு. இதனால் நம்மையும் அறியாமலே நம் பழக்க வழக்கங்களில் ஒரு மாறுதல். முன் கால நிகழ்ச்சிகளைக் காணும்போது, நமக்கொரு புத்துணர்வு. இந்த, காலச்செலவு இலக்கியத்தாலன்றி இயலாது. எனவே இலக்கியப் படிப்பால் வரலாற்றறிவும், வாழ்வியலறிவும் ஒருங்கே பெருகும். இதனால் நமக்குள்ளே குறை நிறைவுற, நாம் " முழு மாந்தர் " ஆகிறோம்.

இலக்கியமும் அறிவியலும் ஒரே பொருளைக் கையாளலாம். ஆனால் சொல்லும் முறையால், எழும் உணர்விற்றான் எத்துணை வேறுபாடு! அறிவியல் அறிஞன் ஒரு முளரியை ஆயிரம் கூறுக்கிப் பெருக்காடி கொண்டு நோக்கி, கரணிய கருமமுறையில், அணுவணு வாக ஒவ்வொரு கூறும் வளரும் வகையைச் சுவைபட விளக்கிப் பக்கம் பக்கமாக எழுதலாம். என்றாலும் அம்முளரியின் மணமும் அழகும் நம்மால் இம்மியும் காணமுடியுமா? இலக்கியக் கலைஞனோ வெனின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் முளரியின் மணத்தை யும் அழகையும் இரண்டொரு வரிகளிற் கூறி, அமைவன் என்றாலுங் கூட அங்கிங்கெனாதபடி, எங்கும் நீக்கமற நிற்கும் ஆற்றலை, அம்மலரின் அழகுக்குப் பின் நிற்கும் அழகுத் தெய்வத்தை, ஒளி மயமாகக் கண்டு, அசைவற்று நிற்கும் நிலையை, அவ்வரிகளில் இரண்டொரு சொற்களால் சுட்டிப் பிறரையும் தன்னைப்போல் தன் வலி இழந்து நிற்கச்செய்கிறான். ‘தோள் கண்டார் தோளே கண்டார்’ எனக் கம்பர் வேறெதைத் தான் கூறியிருப்பார்? இந்நிலையைத் தான் என்றால் அதில் தவறென்ன? என்னே சொற்களின் ஆற்றல்! இவ்வகை அழகுத் தெய்வத்தைக் கண்டு, இன்பக்கடலில் மூழ்கிப் பிறரை மூழ்குவிக்கும் எழுத்தாளர் மிகச் சிலரே.

இச்சில நல்லாரில் ஒருவர் பாடிய,

‘அழகுப் பொருளது அழியா மகிழ்ச்சியாம்'' (A thing of beauty is a joy for ever — Keats)

என்ற தொடரின் விரிவுரைகளே நல் இலக்கியம். இது போன்ற நல்லாரின் படைப்புகளைப் படித்து அவர்களோடு ஒன்றிச் சுவைத்து இன்புற ‘வாரீர் வாரீர்’ என இரு கை கூப்பி வேண்டி, விடை பெறுகிறேன். வணக்கம்!

0

செ. சொ. பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்.

உறுப்பினர் பட்டியல்

திருவாளர்கள்.– 1. தாமரை பெருஞ்சித்திரன், கடலூர்-1. 2. மா. பூங்குன்றன், கடலூர்-1. 3. புலவர் இறைக்குருவன், மதுரை-10. 4. இறை. பொற்கொடி, மதுரை-10. 5. காளியப்பன் (நாராயணன்) நெய்வேலி-1. 6. செ. பன்னீர்ச்செல்வம், சென்னை-2. 7. த. வளங்கோ, புதுவை-1. 8. செ. சித்தார்ததன், அறி. இ. (பி. எசி.) சென்னை-25. 9. கி. மகிழ்கோ, புதுவை-5. 10. திருநாவுக்கரசு, பொ. இ. வேலூர்-9.

11. புலவர் சா. அடல் எழிலன், திருவையாறு. 12. ந. மூத்துக் குமரன், அறி. இ. ஆ. ப. குளத்துப்பாளையம். 13. திருச்சி மாவட் டத்தான், 14. ந. செங்குட்டுவன், திருச்சி-14. 15. அருண்மொழி யன், திருச்சி-14. 16. பொற்செழியன், (வே. நா. இரேணுகோபால் பெங்களூர்-1. 18. உணர்வுப்பித்தன், (ஆ. சொக்கலிங்கம்) திருச்சி-10. 18. உளங்கவரழகன், இராசிபுரம். 19. நாவை-சிவன். (தமிழ்மகன்) கீரனூர். 20. ச. கலியமூர்த்தி, காவேரிநகர்.

21. வே. மாறன், பெங்களூர்-21. 22. சி. பூ. மணி, பெங்களூர்-21. 23. க. அப்பாத்துரை, நடுப்பட்டி. 24. ச. சின்னத் துரை, நெய்வேலி-1. 25 அன்புவாணன், (த. கோவிந்தன்) நெய் வேலி-1. 26. அ. அருள்நெறி. நெய்வேலி-2. 27. ஆ கருப்பையா, நெய்வேலி-3. 28. இரா. அப்பாவு, நெய்வேலி-3 29. இரா. பெருந் தேவன், நெய்வேலி-2. 30. மு. அறவாழி, நெய்வேலி-1,

31 பொன்-தமிழ்மாறன் (இராமசாமி), நெய்வேலி-1. 32, தமிழ நம்பி, அறங்கண்டநல்லூர். 33. புலவர் பா. வீரப்பன், ஆனை மலை. 34. நா. இளமாறன், பெகும்பகல்லாக்குடியிருப்பு. 35. க. மலர்ச் செல்வன், (தனராசன்) மதுரை-1. 36. பா. பொ. இளங்கோ, உக்கரம். 37. செ. பெரிய நாடார், தெற்குச்சூரன்குடி. 38. சே. கு. அரசங்கோவன், மேட்டூர் அணை-1 39. ஞா. தாமசு, மணிமுத் தாறு. 40. கே. பூபதி. பெங்களூர்-16.

41. துரை. சம்பத்குமார், க. இ. ஈரோடு-1. 42. அறவாழி, தளவாய்ப்பட்டணம். 43. இல. க. இரத்தினவேல், திருச்சிராப் பள்ளி-1. 44 சு. திருஞானம், திருச்சிராப்பள்ளி-1. 45. ஆம்பூர் கே. ஏ. மணவாளன், பெங்களூர்-5. 46. இர. பரணன், பரணம்,

47. மு. வ. பரமசிவம், நடுப்பட்டி. 48. ம. சோசு, உத்தமபாளையம். 49. மு. திருநாவுக்கரசு, அண்ணுமலை நகர். 50. க. இராமசாமி, கோவில்பட்டி.

51. ஒ. பிச்சை, தெற்குத்தெரு, மேலூர். 52. இல. வேலரங்கன், சோமையனூர். 53. கெம்பீரம், பெங்களூர்-1. 54 செ. பெருமாள், கடத்தூர். 55. புலவர் வ. அரிஅரன், ஒண்டிப்புதூர். 56. ந. தேவராசன் வேலூர்-1. 57. க. செகநாதன், பி. எசி. ஈரோடு. 58. இராசமாணிக்கம், காரைக்குறிச்சிப்புதூர். 59. வெ. கிழார், பெங்களூர்-21. 60 சா. பொழிலன், நெய்வேலி-2.

61. கா. சே. சாத்தப்பிள்ளை, பி. எசி. பி. டி. ஆமூர். 62. புலவர். கா. இளமுருகன், புன்செய்ப்புளியம்பட்டி. 63. ப. கு. முருகவேள், புன்செய்ப்புளியம்பட்டி. 64. புலவர் நா. அருணன், எரங்காட்டுப்பாளையம். 65. பா. அறவாழி, சென்னை-7. 66. அ. வெள்ளிமலையார், திருச்சிராப்பள்ளி-8. 67. சாலை. இளந்திரையன், எம்.ஏ.எம்.லிட், புதிய தில்லி-5. 68. செ. வெற்றிவேந்தன், (செயராமன்) நீலமலைத்தோட்டம்-இராசிபுரம். 69. முல்லைவாணன், சிங்கை. 70. ந. இராசகோபாலன், தஞ்சாவூர்-1.

71. அகத்தி கிருட்டிணன், இ. அ. (வேளாண்) சோளிங்கபுரம். 72. ஏ. கே. மணி, பி. இ. எ.. எசு. எசு, 1 பெங்களூர்-38 73. வே. ஐயனப்பிள்ளை, வேம்பனூர். 74. வ. கௌரிநாதன், திருச்சி-14 75. எழிலரசன், திருச்சி-14. 76. பொன்-தங்கவேலன், பெங்களூர்-15. 77. தி. எழிலரசன், (இரமணி, மதுரை-3) 78. பொன்-மாறன். (இராமகிருட்டிணன்), மதுரை-3. 79. மறை-நித்தலின்பன், கோவை. 80. தமிழ்க்கூத்தன், கருந்திட்டைக்குடி.

81. புலவர். ச. தமிழ்வேலன், மீனுட்சிபுரம். 82. அ. இளங்கோ பி. எசி. பி. டி. பெருமாம்பாளையம். 83. புலவர். த. மாணிக்கம், கூகலூர். 84. புலவர். திரு. மாரி விசுவநாதன், வால்பாறை. 85. பா. வளன் அரசு, க. மு. திருநெல்வேலி-2 86. கரு. பேச்சிமுத்து, திருச்சி-14. 87. அ. சாமிக்கண்ணு. அரூர். 88. கே. அரசு, பெங்களூர்-21. 89. ந. சுப்பையா, அருமடல். 90. த. சுப்பிரமணியன், செட்டிக்குளம்.

91, த. வையாபுரி, ஆனைமலை. 92. எசு. கே. எசு. காதர், அம்பாலா. 93. இர. சு. கிருட்டிணன், கீழ்த்தென்குளம். 94.

அ. மீ. இராமமூர்த்தி, திருவாரூர். 95. வை. வேதையன், திருவாரூர். 86. த. சரவணத்தமிழன், திருவாரூர். 97. மா. இறைவன், திருச்சி-14 98. த. அன்பழகன், கடலூர்-1. 90. பெ. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி. 100. பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி.

101. க. நாராயணன், பெகும்பகல்லாக்குடியிருப்பு. 102. வி. இராசமாணிக்கம், எம். ஏ. கோயமுத்தூர்-18 103 மு, கதிரவன் நெமலி. 104 அ. கிருட்டிணசாமி. பெங்களூர் 21. 105 துரை-தெட்சிணாமூர்த்தி, மேலச்செம்மங்குடி. 106 க. சிவானந்தன், திருமலைராயன்பட்டினம். 107 அரங்க-திருமாறன், புதூர், உரத்த நாடு. 108 க. அன்புமணி, திருச்சி-15 109 கரி. நடவரசன், நெய்-வேலி-3. 110 இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி.

(111) ப. துரையரசன், கைகாட்டிப்புதூர். (112) கோ, நில வழகன், க. மு. சென்னை-30 (113) க. சி. அகமுடை நம்பி, பி. இ., மதுரை (114) சு. வலங்கைப்பாண்டியன், மதுரை. (115) சி. குமார சாமி, எல். எம். இ., மதுரை. (116) பொன்-இராமானுசம், சுத்தமல்லி. (117) நெல்லை சு. மணியன், திருச்சி-2 (118) முத்து-செல்வன், அலசூர். (119) ஆ ப. தொல்காப்பியன், மொ. ஆல மரத்துப்பட்டி (120) இரா. தங்கராசன், மாரம்பாடி.

(121) ப. பெரியசாமி விருதுநகர். (122) பழங்கரைவேள், பழங்கரை. (123) இந்திய வான்படைத் தமிழன்பர்கள். (124) உ. த. க. பெங்களூர் நகரக்கிளை. (125) செ. தென்னவன், கவுண்டன்பாளையம். 126. காரை-இறையடியான், காரைக்கால். (127) காரை-அலீம், காரைக்கால். (128) தே. நே. சித்திரச்செல்வி, ஆரூர். (129) புலவர் இ. தேவநேயச்சித்திரன், கீ. அ. செங்கழுநீர்ப் பட்டு (130) வே. மு. பொதிய வெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

(131) ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். (132) த. முத்துக்குமரன், க. இ. பாம்பூர். (133 ஆர். வேணுகோபால், புதுவை-1. (134) இரா. செயராமன், நெய்வேலி-2. (135) திருவாட்டி வேளாங்கண்ணி உரோசுமரி, தி. அத்திப்பாக்கம். (136) தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி-1. (137) மு. இளம்பரிதி, உரத்த நாடு. (138) ப. இளவழுதி, உரத்தநாடு. (139) ந. இள முருகன் அறி. இ. ஆ. ப. நீடாமங்கலம். (140) பி. என் அப்பாசி கவுண்டர், காளிங்கராயன்புதூர்.

(141) சிங்கை செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை (142) இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம். (143) அ. தங்கராசன் ஈப்போ, மலேசியா. (144) கு. அண்டிரன், நாயனூர்பாளையம் [தெ. ஆ] (145) ப. தாயம்மாள் அறவாணன், சென்னை-29 (146) ச. பாண்டியன், ஈப்போ, மலேசியா. (147) பெ. புதுமைப்பிரியன், மாலாக்கா, (148) புலவர் ஞா. நன்முல்லை, விரியூர். [தெ. ஆ] (149) இரா. வெற்றியரசு, நெய்வேலி-1. (150) ப. நன்முல்லை, சிங்கை.

[151] இரா. அருட்குவை, நெய்வேலி-3. [152] அ. குமணன், சிங்கை. [153] இ. எசு. சி. மூர்த்தி, பெங்களூர்-16. [154] துரை-அருண்மொழி, நெய்வேலி-1. [155] செ. மேதலைவன், நெய்வேலி-3. [156] த. செகந்நாதன், அம்பாலாப்படைவீடு. [157] இறைவாணன், சிங்கப்பூர். [158] ப. தண்டபாணி, கான்பூர். [159] சே. கணபதி, மலேசியா. [160] புலவர்-குமர. தன்னொளியன், கண்ணமங்கலம் (வட ஆ. மாவட்டம்)

[161] ஏ. செல்வராசு, கான்பூர்-8 [162] இ. செந்தமிழ்ச்சேய் பொறி. இ. அரசூர்-தெ. ஆ. மாவட்டம். [163] கி. சீதாராமகுப்தா, உடுமலைப்பேட்டை. [164] ம. துரைசாமி, பீடோங்-மலேசியா. [165] எம். ஏ. இளஞ்செல்வன், (எம். இராமு) பீடோங்-மலேசியா. [166] பெ. அரசு, மலாக்கா. [167] இரா. காளிமுத்து, கோலாலம்பூர். [168] மருத்துவர். சி. இராமச்சந்திரன், சேலம். 169] பி. இலக்குவன், குவைத்து. [170] புலவர். கா. சு. சண்முகம், பல்லடம்.

[171] புலவர். ப. சுப்பையன், நாச்சிப்பாளையம். திருப்பூர். [172] புலவர். திருமேனி, நாகராசன், காரைக்கால். [173] காரை-அறவாழி. காரைக்கால். [174] மு. துரைச்சாமி, க. மா. அ. சுலுத்தான்பேட்டை, பல்லடம். [175] க. தமிழப்பன், அ. அரங்கசாமி, - திருப்பூர்-2. [176] சி. அறிவுறுவோன், அம்மையகரம். [177] திருவாட்டி. இராசேசுவரி செந்தில் அம்பாலா. [178] கல்லூர் மணியம், மலாக்கா. [179] பறம்பை. தென்னவன், பறம்புக்குடி. [180] பொ. பொன்னரசன், க. இ, மேலூர். [181] அர. இராசேந்திரன், க. இ. குளத்துப் பாளையம்-பல்லடம்.

'தென்மொழி'க்கு நன்கொடை.

17-12-69 முதல் 6-2-70 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் படடியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

உருபா

(கிண்டிப் பொறியியற் கல்லூரி மாணவர்கள்:-

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாளர்கள்: ச. வீரமணி, சீனிவாசன், சி. பாலசுந்தரம,
பாணி, அ இராசேந்திரன், அரங்க-வரதராசன்,
ப. விசயகுமார், கா. நாகமூர்த்தி
(தலைக்கு அரை உருபா மேனி) 4-50

திருவாளர்கள்: இடேவிட் அருள், சி. மதிவாணன்,
கெ. தனுக்கோடி, ந. சண்முகம், சுப்பிரமணியன்,
செ இரா. செல்வக்குமார், மு. சந்திரமோகன், கோபாலன்,
க. வி. சத்தியராசு, சே. பிரின்சு, விவேகானந்தன்,
பிரகாசத்துரை (தலைக்கு இரண்டு உருபா மேனி) 24-00

திரு. நெ. மாரியப்பன்	2 50
திரு ந. சௌந்திரராசன்	3-00
திரு இராசமோகன்	3-00
திருவாளர்கள்: க. மீனாட்சிசுந்தரம், இர. செ. தா. மொகிதீன், வேங்கட்ராமன், (உருபா ஐந்து மேனி)	15-00
திரு சு. மோகன், மாநிலக்கல்லூரி, சென்னை.	2-00
திருவாட்டி. தொ. இலக்குமி, சென்னை.	2-00
திரு இரா. சுப்பிரமணியம், நல்லிப்பாளையம், திருச்செங்கோடு வட்டம்.	1-00
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	5-00
திரு மனோகரன், இராசிபுரம்.	2-00
திரு அ. பா. தமிழ்வென்றி, பெங்களூர்-8.	2-00
திரு அர. உதயகுமார், பெங்களூர்.	1-00

தென்மொழி அன்பர் திருமணம்

தென்மொழி அன்பரும், நீடாமங்கலம் தென்மொழி முகவருமான திரு. **ந. இளமுருகன். அறி. இ. ஆ. ப.** *அவர்கட்கும் திருவாட்டி.* **மலர்க்கொடி [புட்பவல்லி]** *அம்மையார் அவர்கட்கும் வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு.* **அன்பில் தருமலிங்கம்** *அவர்கள் தலைமையில் கடந்த மடங்கல் கஉ-ஆம் நாள் [2—9—71] அன்று திருமணம் சிறப்புற நிகழ்ந்தது.*

இல்லறம் பூண்ட அன்னார் இருவரும் இனிதே நெடிது வாழ நெஞ்சுவந்து வாழ்த்துகின்றோம்.

—அமைச்சர்

நல்லார் செய்த சிறுபிழை.

— ஆ. துரைக்கண்ணு.

'தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரத்தில்' அதன் ஆசிரியரும் பாவிய உறுப்பினராய் உள்ளமை தெளிபு. 'இளமையோர் இளங்கொடி'யாகிய கண்ணகி, 'தேவந்திகை மேல் திகழ்ந்து தோன்றி' ஆசிரியர்க்கு அருளியதாக 'வரந்தரு காதை'யில் வந்துள்ளது

சேரன் மலைவளங் காணச் சென்ற பகுதியாகிய 'காட்சிக் காதை' யிலும் இளங்கோவடிகள் இருந்தனர் என்பது அடியார்க்கு நல்லார் உரையினுல் பெறப்படுகிறது. 'கானல் வரி' நீங்கலாக 'ஊர் சூழ் வரி' வரையே அவரது உரை கிட்டிற்று எனினும், பதிகத்திற்கு உரையெழுதுமிடத்து, சேரன் மலைவளங்காணச் சென்றபோழ்து இளங்கோவும் உடன் சென்றனர் எனக் குறித்துள்ளார்.

"அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
யானறிகுவன் அதுபட்ட தென்று ரைப்போன்"

[பதிகம் : 10,11]

என்னும் இரண்டு வரிகட்கு உரையெழுதப் போந்த அடியார்க்கு நல்லார்,

"*குறவர் இளங்கோவடிகளை நோக்கி அறிந்தருள் என்ற அளவிலே செங்குட்டுவன் அதிசயித்து முக நோக்கப் பரிசில் காரணமாக வந்து அவனுழையிருந்த சாத்தன் அதனைக் குறிப்பான் அறிந்து அது விளைந்ததெல்லாம் யானறிகுவன் என்று உரைக்கின்றவ னென்க*"

எனச் சொல்லியுளார். மற்றும்,

"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

[பதிகம் : 55-60]

என்னும் வரிகட்கு உரையெழுதுமிடத்து,

"*அங்ஙனம் அரசனோடு சாத்தனுர் கூறக் கேட்ட அடிகள் பொருட்பகுதியை மூவகை உள்ளுறையாக வகுத்துக் கூறுவார்*" எனச் சொல்லியுள்ளார்.

அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை ஆகிய உரைகளுடன் சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்த பண்டாரகர் உ. வே. சாமிநாதர் அவர்களும், அந்நூற்குக் கதைச் சுருக்கம் எழுதுங்கால், அடியார்க்கு நல்லார் உரையினைத் தழுவி,

"...அவ்வேடர்கள்......மலைவளங் காண்டற்குத் தனது தேவி வேண்மாளோடும் தம்பி இளங்கோவடிகளோடும் புறப்பட்டு நால்வகைத் தானையும் சூழவந்து பேராற்றங் கரையிலுள்ள மணற் குவியலில் இருக்கும் சேரன் செங்குட்டுவனைக் கண்டு வணங்கிச் சொன்னார்கள்"

என்றே எழுதியுள்ளார்.

அடியார்க்கு நல்லார் உரையின்படி, சேரன் மலைவளங் காணச் சென்றதைக் கூறும் காதையான காட்சிக்காதையில் இளங்கோ வடிகள் இருந்தனரா ?

பொதுவாக, பதிகமும் வஞ்சிக் காண்டமும் இடையில் செருகப் பட்டவை என்ற கருத்து, தமிழறிஞர் சிலரிடையே நிலவி வருகிறது. அஃது உண்மையேயாயின், இக்கட்டுரை தோன்றலிற் பொருளே இல்லை.

'காட்சிக் காதையில் இளங்கோவடிகள் இல்லை என்றும்; மலை வளங் காணச் சென்ற குட்டுவனிடம் கூறிய பின்னரே, குணவாயிற் கோட்டத்திருந்த அடிகளிடம் கண்ணகி பற்றிக் குன்றக் குறவர் கூறினர் என்றும்' அடியார்க்கு நல்லார் உரையை, **நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்** மறுத்துள்ளார்.

"காட்சிக் காதையில் மலை வளங் காணச் சென்று பேரியாற்றங் கரையில் தங்கிய செங்குட்டுவனோடு, இளங்கோவடிகள் சென்றிருந் தனர் என்பதற்கு யாதொரு குறிப்பும் இன்றாகலானும், குறவர்கள் செங்குட்டுவனிடம் உரைத்தனரெனவே ஆண்டுக் கூறியிருத்தலானும், வஞ்சி நகரத்தில் வெள்ளிமாடத்தில் 'இளங்கோ வேண்மாள் உடனிருந்தருளி' என்புழி, இளங்கோ என்பதனை வேறுபிரித்து அடிகள் எனக் கூற்'னும், அவர் உடன் சென்றார் என்பது பெறப்படாமை யானும் உடன் சென்றிருப்பினும் குறவர் அவரிடம் கூற அதனைச் செங்குட்டுவன் கேட்டு அதிசயித்தனன் என்பது கூடாமையானும் அவ்வுரை பொருந்தாமையின், அரும்பதவுரை யாசிரியர் ஆய்ந்து கூறிய, 'குணவாயிற் கோட்டத்துக் கடவுளர் முன்னர்த்

துறந்திருந்த இளங்கோவடிகளுக்குக் கண்ணகி வானவர் போற்றத் தன் கணவனெடு கூடியது கண்டு செங்குட்டுவனுக் குரைத்த குறவர் வந்து, எல்லா மறிந்தோய்! இதனை அறிந்தருள் என்று கூறிப் போக, பின்பு செங்குட்டுவனைக் கண்டு போந்து அடிகளுழை வந்த சாத்தன் அதுபட்ட வாறெல்லாங் கூற' என்னும் உரையினை மேற் கொண்டு, யாமும் இங்ஙனம் உரை கூறினும்,"

எனத் தமது சிலப்பதிகார உரை நூலில் நாட்டார் கூறியுள்ளார்.

இவ்வாருக 'அடியார்க்கு நல்லார் கூற்று, பிழையே' என நாவலர் நாட்டாரவர்கள் மறுத்துள்ளனராயினும், சிலம்பின் கண் ணுள்ள வேறு சில குறிப்புகளை நோக்குழி, அவை அடியார்க்கு நல்லார் கூற்றினை மறுத்தற்கு உடன்பாடாக இருத்தலை உணரலாம்.

"குண வாயிற் கோட்டத் தரசு துறந்திருந்த
குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்கு"

எனப் பதிகத்தில் வரும் முதலிரண்டு வரிகட்கு,

"திருக்குண வாயிற் கோயிற்கண்ணே அரச போகத்தைத் துறந்து தவவுருத் தாங்கியிருந்த குடதிசைக் கோவாகிய செங்குட் டுவனென்னும் சேரற்கு இளங்கோவாகிய அடிகட்கு"

எனப் பொருளுரைத்தார் அடியார்க்கு நல்லார். பதிகத்தின் 10, 11 ஆகிய இருவரிகட்கும், 55 முதல் 60 முடியவுள்ள ஆறுவரிகட்கும் கூறப்பட்ட பொருளின்றும், பதிகத்தின் முதலிரு வரிகட்கு,

"திருக் குண வாயிற் கோயிற் கண்ணே அரச போகத்தைத் துறந்து தவவுருத் தாங்கியிருந்த குடதிசைக் கோவாகிய செங்குட்டுவ னென்னும் சேரற்கு இளங்கோவும், சேரனுடன் தற்போது மலைவளங் காண வந்திருப்பவருமாய அடிகட்கு"

என்றே அடியார்க்கு நல்லார் தம் உரையைக் கோடல் வேண்டும்.

அவரது உரையின்படி, சேரன் மலைவளங் காணச் சென்றது பற்றிச் செப்பும் காட்சிக் காதையில் இளங்கோவடிகள் இருந்தன ராதல் வேண்டும். அவர் கூற்று உண்மையே யாயின்,

"விளங்கில வந்தி வெள்ளி மாடத்து
இளங்கோ வேண்மாள் உடனிருந் தருளி"

[காட்சி : 4,5]

எனவரும் வரிகளிற் பயின்றுள்ள 'இளங்கோ' என்னுஞ் சொல்லே 'இளங்கோவடிகளைக்' குறித்ததாதல் வேண்டும். என்னை? காட்சிக்

காதையை நோக்குழி, அடிகள் பற்றிய குறிப்பு வேறெவ்விடத்தும் வாராமையான் என்க.

'நன்னன் வேண்மாள்,' 'உதியன் வேண்மாள்' என்பனபோல் 'இளங்கோ வேண்மாள்' என்பதும் பெயராகுமென்று அரும்பதவுரையாசிரியர் குறித்துள்ளார். நல்லாரின் கருத்திற்கேற்ப 'இளங்கோ' என்பது அடிகளையே குறிக்குமெனக் கொள்வோம். 'கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம்' ஆசிரியர் முன்தோன்றி யருளியதாக வரந்தரு காதை குறிக்கின்றது. இதனை,

"யானும் சென்றேன் என்எதிர் எழுந்து
தேவந் திகைமேற் றிகழ்ந்து தோன்றி" [171, 172]

என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

பாவியத்தின் 25-ஆவது காதையான காட்சிக் காதையில் வரும் 'இளங்கோ' என்ற சொல்லும், இறுதிக் காதையும் 30-ஆவது காதையுமான வரந்தரு காதையில் வரும் 'யானும்' என்ற சொல்லும் ஆகிய இரு சொற்களும் இளங்கோவடிகளையே குறிக்குமெனல் பொருந்தா. என்னை ? பாவியத்துள் ஓர் உறுப்பினராய ஆசிரியர் பாவிய நிகழ்ச்சிகளில் தம்மைக் குறித்துழி, ஓரிடத்துப் 'படர்க்கை' யிலும், பிறிதோரிடத்துத் 'தன்மை'யிலும் குறித்தல் ஏலாதாம். மற்று, வரந்தரு காதையில் ஆசிரியர் உள்ளனர் என்பதனை மறுத்தற்கு இயலாது; எனவே 'யானும்' என்ற தன்மைச் சொல்லாற்றான் பாவிய உறுப்பினராய ஆசிரியர் தம்மைக் குறித்துள்ளார். குறிக்கவே, காட்சிக் காதையில் வரும் 'இளங்கோ' என்னும் படர்க்கைச் சொல் அடிகளைக் குறியாமை பெறப்படும்!

இனி, இக்காலத்து நூல்கட்கு முன்னுரை போல அக்காலத்துப் பாவியங்கட்குப் பதிகமாகும். பொதுவாக நூல் எழுதி முடித்த பின்னரே, முன்னுரை எழுதுதல் இற்றைய மரபு. முன்னுரை எழுதியபின் நூலினைத் தொடங்குதல் அரிது. சிலம்புப் பாவியம் முற்றிலும் எழுதி முடித்த பின்னரே பதிகம் தோன்றியிருத்தல் வேண்டும். சிலம்பிலுள்ள உரைபெறு கட்டுரையை நோக்குழி, அஃதும் நூலெழுதி முடிந்த பின்னரே எழுப்பட்டிருத்தல் வேண்டும். சிலம்பின் தொடக்கத்திலுள்ள 'திங்களைப் போற்றுதும்...' முதலாய, வாழ்த்தியலான் வந்த சிந்தியல் வெண்பாக்கள் மங்கல வழக்கின்

பாற்பட்டு, நூன்முதற் றொடக்கத்திற்குப் பொருந்தி யிருத்தலானும், பதிகத்துள் 30 பிரிவாகக் காதைகள் பிரிக்கப்பட்டமை கூறப்பட்டதுடன் அவற்றின் தலைப்புகளும் கூறப்பட்டமை காண்புழி, பாவியமியற்றி முடித்தற்கு முன்னரே காதைப் பிரிவுகள் செய்யப் பட்டு, தலைப்புகளும் தரப்பட்டன எனக் கோடல் ஏற்புடைத்தன்றாக லானும், பாவியம் தோன்றிய பின்னரே பதிகம் தோன்றியிருத்தல் வேண்டும் என்பது பெறப்படும்.

கோவலன் விற்கக் கொணர்ந்த சிலம்பினைக் கண்ட பொற் கொல்லன்,

"கோப்பெருந் தேவிக்கு அல்லதையிச் சிலம்பு
யாப்புறவு இல்லை" [121, 122]

எனக் கருதியதாகக் கொலைக்களக் காதையில் கூறப்பட்டுள்ளது. இதே நிகழ்ச்சியினைப் பொற்கொல்லன் கருத்தாக,

"கோப்பெருந் தேவிக்கு அல்லதையிச் சிலம்பு
யாப்புறவு இல்லை" [23, 24]

எனப் பதிகத்தில் சாத்தனூர் எடுத்தியம்புவதாக அடிகள் அமைத் துள்ளார். பொற்கொல்லன் கூற்றினை மடுத்த நெடுஞ்செழியன்,

"கொன்று அச் சிலம்பு கொணர்க ஈங்கு..." [153]

என்று கட்டளையிட்டதாகக் கொலைக்களக் காதையில் கூறப்பட் டுள்ளது. இதே நிகழ்ச்சியினை, நெடுஞ்செழியன் கூற்றாக,

"கொன்று அச் சிலம்பு கொணர்க ஈங்கு..." [30]

எனப் பதிகத்தில் சாத்தனூர் எடுத்தியம்புவதாக அடிகள் அமைத் துள்ளார். 'கட்டுரை காதை'யில் மதுராபதி கூற்றாக.

"...சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்தினோர்
அங்காடிப் பட்டு அருங்கலன் பகரும்
சங்கமன் என்னும் வாணிகன் தன்னை
முந்தைப் பிறப்பில் பைந்தொடி கணவன்
... ... என்றே
விழுவோள் இட்ட வழுவில் சாபம்
பட்டனிர் ஆதலின் கட்டுரை கேள் நீ.
... ...

வாரொலி கூந்தல்நின் மணமகன் தன்னை
ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
ஈனோர் வடிவிற் காண்டல் இல்..." [149—176]

என்னும் வரிகள் வந்துள்ளன. இதே நிகழ்ச்சியினை, மதுராபதி கூற்றாக,

"முதிர்வினை நுங்கட்கு முடிந்தது ஆகலின்
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவனொடு
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கமன் என்னும் வாணிகன் மனைவி
இட்ட சாபம் கட்டிய தாகலின்
வாரொலி கூந்தல்நின் மணமகன் தன்னை
ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
ஈனோர் வடிவிற் காண்டல் இல்..." [45 — 53]

எனப் பதிகத்தில் சாத்தனார் எடுத்தியம்புவதாக அடிகள் அமைத்துள்ளார்.

மேற்காட்டிய பாவிய வரிகளையும் பதிகவரிகளையும் ஒப்புநோக்க, பாவியத்துள்ள உறுப்பினர் கூற்றை அவ்வாறே பதிகத்துள்ளும் அடிகள் எடுத்தாண்டுளார் என்பது தெளிவு. இவை யிவ்வாறாக, அடியார்க்கு நல்லார் கூற்று உண்மையே என்றால், காட்சிக் காதையிலுள்ள குன்றக்குறவர் கூற்றினை 'அப்படியே' பதிகத்துள்ளும் அடிகள் எடுத்தாண்டிருத்தல் வேண்டும். ஆயின்,

"ஏழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்
கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை யிழந்து தனித்துய ரெய்தி
வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்
எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட்டு யாங்கள் நினைப்பினும் அறியேம்"
[56 — 62

எனக் காட்சிக் காதையில் வரும் குன்றக் குறவர் கூற்று, ...

"பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினிக்கு
அமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்
காதல் கொழுநனைக் காட்டி அவளொடெம்
கட்புலங் காண விட்புலம் போயது
இறும்பூது போலும் அஃதறிந் தருள் நீ..." (4 — 9)

எனப் பதிகத்துள் மாறுபட்டுள்ளது. எனவே, செங்குட்டுவனையும். அடிகளையும் தனித்தனியே கண்டு, குறவர் கூறினராதல் வேண்டும்.

இனி, அடியார்க்கு நல்லார் உரையின் படி. மலைவளங் காணச் சென்ற செங்குட்டுவனோடு அடிகளும் சென்றிருந்தனராயின், காட்சிக் காதையில் வந்த குறவரது கருத்தினை அல்லது கூற்றினைப் பதிகத்துள் அடிகள் எடுத்தாண்டவராதல் வேண்டும். பொதுவாக எடுத்தாளப் பெறுங் கருத்து அல்லது கூற்று, மூலக் கருத்து அல்லது கூற்றுக்கு ஒத்த அளவினதாயோ, அன்றி அதனினும் அளவிற் குறைந்ததாயோ இருத்தலே இயல்பு. காட்டாக, முன் குறிக்கப்பெற்ற மதுராபதியின் கூற்று, கட்டுரை காதையில் பெருகி விளங்க, அதே கூற்று அளவிற் குறைந்ததாய்ப் பதிகத்துள் எடுத்தாளப்பட்டமை நோக்குக.

கண்ணகி விட்புலஞ் சென்ற செய்தியைக் கூறும் 'குன்றக் குரவை யில்,

"*முலையிழந்தால் மாமதுரை கோளிழைத்தாள்* காதல்
தலைவனை வானோர் தமராருங் கூடிப்
பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன்று பாடுதும்..." (18 — 21)

என்ற வரிகளான், 'வானோர் தமரர் கண்ணகிக்கு அவளின் காதற் கொழுநனைக் காட்டிக் கொடுத்தனர்' என்பது பெற்றும். காட்டிக் கொடுத்த பின்னரே கண்ணகி கொழுநனை அறிந்தனள்; பின், வானூர்தியேறி விஞ்சையர் உலகிற்கு ஏகினள். ஆயின், காட்சிக் காதையில் கண்ணகிக்கு, அவள் கணவனை வானோர் காட்டிக் கொடுத்தனர் என்னுஞ் செய்தி குறிக்கப் படவில்லை.

"வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்"

என்ற அளவிலேயே குட்டுவன் முன்னர் குன்றக் குறவர் கூறினர். மற்று, பதிகத்தில்,

"ஒருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினிக்கு
அமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி..."

என 'வானோர் வந்து கண்ணகிக்கு, அவள் கொழுநனைக் காட்டினர்' என்னுஞ் செய்தி குறிக்கப்பட்டுள்ளது. குன்றக் குரவையில் வந்துள்ள உண்மைச் செய்தி, குறவர் கூற்றாகக் காட்சிக் காதையில் வாராமல் பதிகத்துள் மட்டுமே வந்துள்ளது. ஆகலான், காட்சிக் காதையில் வந்துள்ள குறவர்தங் கருத்தினை அல்லது கூற்றினை அடிகள் எடுத்தாண்டிருத்தல் இயலாது என்பது விளங்கும். விளங்கவே அரசனையும் அடிகளையும் தனித்தனியே கண்டு குறவர் கூறினர் என்பது பெறப்படும்.

'மணமதுரையோடு அரசு கேடுற வல்வினை வந்துருத்த காலைக் கணவனையங்கிழந்து போந்த கடுவினை'யாட்டி என்பதும் 'கட்புலங் காண விட்புலஞ் சென்றவள்' என்பதுமாகிய செய்திகளை கண்ணகி பற்றிக் குறவா முதற்கண் அறிந்திருந்தனர் என்பதைக் 'குன்றக் குரவை' கூறுமாற்றான் அறியலாம். எனவே காட்சிக் காதையில் குட்டுவனிடம் கூறியபோழ்து, அவர்கள் கண்ணகியின் பெயரை அறிந்திலர் என்பதும், அவள் சோணாட்டினள் என்பதைத் தெரிந்திலர் என்பதும் உறுதி. அதனாற்றான் சேரனிடம் செப்புமிடத்து,

"எந்நாட் டாள்கொல் ! யார்மகள் கொல்லோ ?"

என்று அறியாது கூறினர். பின்னர், தண்டமிழ்ச் சாத்தன் கண்ணகி பற்றிய வரலாறு முழுதுங் கூறவே, அவ்வரலாற்றினை மடுத்துப் பின் குணவாயிற் கோட்டத் திருந்த அடிகள்பாற் சென்று செய்தி யுரைத்தனராதலின், அவர் தங் கூற்றில்,

"எந்நாட் டாள்கொல் ! யார்மகள் கொல்லோ ?"

என்னும் 'நாடு, குடிப்பிறப்பு' பற்றிய வியப்பு இல்லாமற் போயிற்று இதனாலும், குட்டுவனையும் அடிகளையும் குறவர் தனித்தனியே கண்டனர் என்பது பெறப்படும்.

இனி, கண்ணகியைப் பத்தினியெனப் பாடிக் களித்தனர் குறவரெனக் குன்றக்குரவை கூறுகின்றது. மதுரையைக் கண்ணகி எரித்தனள் என்பதாலும், குறவர்தங் கட்புலங் காண அவள் விட்புலம் போயினள் என்பதாலும் 'அவளொரு பத்தினியாயிருத்தல்

வேண்டும்' எனத் தங்கள் அளவில் குறவர் நம்பிப் பரவி மகிழ்ந்தனர். இது பற்றிக் குட்டுவனிடம் உரைத்தவிடத்து, தாம் கண்ட காட்சியினை மட்டும் கூறினரே யன்றி, கொண்ட கருத்தினைக் கூறினரல்லர். என்னையெனில், கண்ணகி திருமா பத்தினியே, என்பது அவ்வளவில் அவர்கள் கொண்ட கருத்தேயன்றி, அவர்களறிய உலகு கொண்ட ஒரு கருத்தன்று. அதனாற்றான் குட்டுவனிடம் கூறிய போழ்து,

"கான வேங்கைக் கீழோர் காரிகை"

எனமட்டும் சொல்லி நிறுத்தினர். அஃதாவது கண்ணகியைக் 'காரிகை' என்றே உரைத்தனர். 'பத்தினி'யெனச் சேரனிடம் உரைத்தனரல்லர். பின்னர் அவனுழையிருந்த சாத்தன் வரலாறு கூறவும் தாங்கள் கொண்ட கருத்து முற்றும் மெய்யெனக் குறவர் உணர்ந்தனர். இஃதுணர்ந்தபின் அடிகளிடம் சென்றனராகலான், அடிகள்பால் அவருரைத்த கூற்றில் 'காரிகை' எனக் கண்ணகியைக் குறிப்பிடாமல்,

"ஒருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினி"

எனச் சொல்லினர். இதனாலும், சேரனையும் அவனிளவலையும் குறவர் தனித்தனியே கண்டனர் என்பது பெறப்படும்.

காட்சிக்காதையில் வந்துள்ள 'இளங்கோ' என்னும் சொல் அடிகளை உணர்த்தாமையானும்; பாவிய உறுப்பினர் கூற்றினைப் பதிகத்துள் எடுத்தாண்ட அடிகள், குறவர் கூற்றினை அவ்வாறே எடுத்தாளாமையானும்; வானோர் தமரர் கண்ணகிக்கு அவள் கொழுநனைக் காட்டினர் எனக் குன்றக் குரவையில் வந்துள்ள செய்தி, குட்டுவனிடம் கூறிய குறவர் கூற்றில் இல்லாது, அடிகளிடம் கூறிய கூற்றில் மட்டும் வந்துள்ளமையானும்; குட்டுவனிடம் உரைத்த போழ்திருந்த 'எந்நாட்டாள் கொல்! யார்மகள் கொல்லோ?' என்ற வியப்பு, அடிகளிடம் உரைத்த போழ்து இன்றாகலானும்; குட்டுவனிடம் கூறுமிடத்துக் கண்ணகியைக் 'காரிகை' எனக் குறித்துப் பின்னர் அடிகளிடம் கூறுமிடத்துப் 'பத்தினி' எனக் கூறினராகலானும் சேரன் செங்குட்டுவனையும் இளங்கோவடிகளையும் குன்றக் குறவர் தனித்தனியே கண்டுரைத்தனர் என்பது பெறப்படவே, மலைவளங் காணச்சென்ற சேரனோடு அடிகள் சென்றனரல்லர் என்பது தெற்றென விளங்கும். ஆகலான் அடியார்க்கு நல்லார் கூற்று, பிழையே ஆகும். 0

(தொடர் கட்டுரை)

அறிவியல் உலகில்...!

த. சலாவுத்தீன், அறி. இ., ஆ. ப.

நாம் அறிவியல் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாளும் அறிவியலறிஞர்கள் புதுப்புதுப் பொருட்களைக் கண்டுபிடித்த வண்ணமே இருக்கின்றார்கள். அறிவியலின் இந்த வேகமான வளர்ச்சி மாந்தர்களின் குமுகாய வாழ்க்கையைப் பெரிதும் மாற்றிக் கொண்டே இருக்கிறது. நாடு முன்னேற்ற மடைந்தால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும். உலகில் மக்களின் வாழ்க்கையை இன்பமானதாக்க அறிவியல் மிகுதியும் பயன்பட்டு வருகின்றது. பழைய மூட நம்பிக்கையுள்ள பழக்க வழக்கங்களெல்லாம் இன்று அறிவியலினால் தகர்த்தெறியப் பட்டுள்ளன. இருந்தாலும் நாம் மட்டும் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட பழங்கதைப் பொய்ப் புளுகுகளை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு நம் வாழ்க்கையில் முன்னேறாமல் இருக்கின்றோம். பழைய மூட நம்பிக்கைகளைப் பகுத்தறிவால் தகர்த்தெறிந்து நம் வாழ்க்கையை இன்பம் நிறைந்ததாக ஆக்கிக் கொள்ள முனைதல் வேண்டும். இக்கட்டுரையில் அண்மையில் புதிதாகக் கண்டுபிடித்த வற்றைப் பற்றிச் சில செய்திகளைத் தருகின்றேன்.

நுண் உயிரியலில் (Microbiology) உருசிய அறிவியலாளர்கள் பெரிதும் முன்னேற்ற மடைந்துள்ளனர். புரதங்கள் (Protin) மாந்தனுக்கு மிகவும் தேவையானவை. இச்சாரத்தின் சிக்கலே நிலஉலகின் உணவுச்சிக்கல் ஆகும். உலக மாந்தரின் எண்ணிக்கை ஏற ஏற, இச்சாரத்தின் அளவைப் பெருக்கும் சிக்கலும் மிகுதியாகின்றது. ஏனெனில் மாந்தனின் உணவில் இது மிகுதியும் பங்கு கொள்ளுகின்றது. புரதங்கள்தாம் மாந்தனின் ஊனை வளர்க்கும் அடிப்படைப் பொருட்களாகும். இவற்றின் குறைவை வேறு எந்தப் பொருளாலும் நிறைவு செய்ய இயலாது. செயற்கை முறையில் இச் சாரத்தை உண்டாக்கப் பல ஆய்வுக் கூடங்கள் முனைந்தன. சோவியத்து நாட்டில் கன்னெய்ம(பெட்ரோலிய)த்திருந்து புரதங்களை உண்டாக்கும் முறையினைக் கண்டுள்ளனர். விலங்குகளுக்குத் தேவையான புரதங்களைப் பெருமளவில் உண்டாக்கும் தொழிற்சாலை ஒன்று உருசியாவில் தொடக்கியுள்ளனர். இதுவே

-தான் இச்சாரத்தைச் செய்யும் உலகின் முதற் தொழிற்சாலை உணவுச் சிக்கலைத் தீர்க்கும் முயற்சியில் இது முதல் வெற்றியாகும்.

ஆண்டுதோறும் கதிரவன் நமக்கு 6×10^7 ஆயிரம் மின்னலகு (K. W.) ஆற்றலை அளிக்கின்றது. இஃது உலகம் முழுவதிலும் பயன் படுத்தப்படும் சாரத்தைவிட 20,000 மடங்கு மிகுதியாகும். கதிரவனிடமிருந்து வருகின்ற ஆற்றலில் அணுவளவே நம்மால் பயன்படுத்தப்படுகின்றது. மற்றது வீணுக்கப்படுகின்றது. இவ் வாற்றலை வீணுக்காமல் மாந்தனின் பல்வேறு பயன்களுக்கு ஈடு படுத்தும் முறைகளை அறிஞர்கள் ஆய்ந்து கொண்டிருக்கின்றனர். நிலவுலகில் பயன்படுத்துவதற்கான 'கதிரவன் உலைகளையும்'; விண் ணில் பயன்படுத்துவதற்கான உலைகளையும் உருசியப் பொறியியலா ளர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இன்றைய மாந்தன் இந்நிலவுலகில் தலைவனாக இருக்கின்றான். நாளை அவன் உலகங்களெல்லாவற்றிற்கும் தலைவனாவான். விண் வெளி ஆராய்ச்சி தொடங்கி 13 ஆண்டுகள் ஆகின்றன. உருசியா 1957-இலும், அமெரிக்கா 1958-இலும், பிரான்சு 1965 இலும் சப்பானும், சைனாவும் 1970-இலும், விண்வெளி ஓட்டத்தில் கலந்து கொண்டன. 1970 மே வரை உருசியம் 449 விண்வெளிக்கலங்களை நிலம், நிலவு, கதிரவன் ஆகியவற்றைச் சுற்றி வரும்படி அனுப்பி-யுள்ளது. இதுவரை அனுப்பிய கலங்களில் பயன்படுத்தப்பட்ட மாழை(உலோகங்)களின் எடை 1,412 கல்லெடை(டன்)கள் ஆகும்.

ஆகஃச்டு 17, 1970-இல் உருசியம் வெள்ளி-7 (VENUS-7) என்ற விண்வெளிக் கலத்தை, புதிர்க் கோளான வெள்ளிக்கோளுக்கு அனுப்பி அதன் புதிர்களை ஆராய முனைந்தது. வெள்ளிக்குச் செல்ல பாதை 19.5 திங்களுக்கு ஒருமுறை தடுப்பில்லாமல் இருக்கும். இந் நேரத்தில் நிலத்திலிருந்து வெள்ளிக்கோளுக்குத் தொலைவு 420 இலக் கம் ஆயிரஞ்சீரடிகள் (42 மில்லியன் கிலோ மீட்டர்கள்) செப்டம்பர் 12, 1970-இல் உருசியம் "நிலவு 16" (LUNA-16) என்ற தானே இயங்கும் நிலவுக்கப்பலை நிலாவுக்கு அனுப்பியது. இது சரியாக 280 மணிகள் விண்வெளியில் இருந்தது. நிலவிலிருந்து நிலவு மண்ணை எடுத்துக்கொண்டு செப்டம்பர் 24, 1970-இல் நிலத்திற்கு வந்து சேர்ந்தது.

மாந்தனின் அறிவியல் முன்னேற்றத்தில் இஃது ஒரு பெரிய வெற்றி ஆகும். மாந்தன் நிலத்தில் இருந்தபடியே "நிலவு–16" -ஐக் கட்டுப்படுத்தி, அனுப்பி, நிலத்திற்குக் கொண்டு வந்துள்ளான். இன்னும் சில நாட்களில் உருசியர்கள் விண்வெளியில் மிதக்கும் ஆய்வுக்கூடங்களை நிறுவி அங்கிருந்து நிலவுக்கும் மற்றக் கோள்களுக்கும் செல்லப் போகின்றார்கள்.

தானே இயங்கும் விண்வெளிக்கப்பலுக்கு ஆகும் செலவு, மாந்தன் தானே செல்லும் விண்வெளிக் கப்பலுக்கு ஆகும் செலவில் 20—25 மடங்கு குறைகின்றது. மாந்தனின் உயிருக்கு உண்டாகும் ஏதம் [ஆபத்து] இல்லாமல் போகின்றது. மாந்தனின் நேர் கண்காணிப்பில்லாமல் விண்வெளிக்கலங்களை மற்றக் கோள்களுக்கு அனுப்பி ஆராய்ச்சிகள் நடத்த முடியும் என்பதற்கு "நிலவு-16" வெற்றி நமக்கு உணர்த்துகின்றது.

பேராசிரியர் பீட்டர் கபிட்சர் (76) என்னும் சோவியத் அறிவியலறிஞரின் 'மிதமாக்கப்பட்ட நீரியக்குண்டை"[Tamed.H.Bomb] செய்துள்ளார். இந்தக் கண்டு பிடிப்பால் மாந்தனுக்கு மிகுந்த ஆற்றல் கிடைக்கும். நீரியத்தை (Hydrogen) வெப்பமாகவும் அடர்த்தியுடனும், வெப்ப-உட்கருவினை (Thermo - neuclear reaction) உண்டாகும்வரை எவ்வாறு வைக்கமுடியும் என்பதை அவர் கண்டுபிடித்துள்ளார். இவ்வாறு வைத்திருக்கும் நீரியத்தைத் தான் 'மிதமாக்கப்பட்ட நீரியக்குண்டு' (Tamed.H. Bomb) என்கிறோம். இதனால் ஒரு குடுவை [காலன்] கன்னெய் [பெட்ரோல்] தரும் ஆற்றலைவிடப் பல மடங்கு ஆற்றலை ஒரு குடுவை கடல் நீரில் நீரியம் எரிவதால் பெறலாம். 0

தமிழ்ச்சிட்டு கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

		உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம்	உருபா	3 00	6-00	4 00
தனியிதழ்	”	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஒரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

இருபதின் - இருபாவியங்கள்

(வீராயி-ஐயை-ஒப்பிலக்கிய ஆய்வு)

—பேரா. ப. தாயம்மாள் அறவாணன். க. மு.

0. 0. இலக்கியத் திறனாய்வுத் துறைகளில் ஒப்பு இலக்கிய ஆய்வு புதிய துறையாகத் தமிழகத்தில் அறிமுகமாகி இருக்கிறது. ஆங்கிலம் உள்ளிட்ட மேனாட்டு மொழிகளில் கூட இஃது அண்மையில் வளர்ந்த திறனாய்வுத்துறையே ஆகும். என்றாலும் ஆங்கு மிக விரைவாக அத்துறை வளர்ந்து செழித்து விட்டது. அங்குச் செழித்த அளவுக்குத் தமிழில் ஒப்பு இலக்கிய ஆய்வு போதிய அளவு வளமை பெறவில்லை. இளமையாகவே இன்றும் இருக்கிறது. இருந்தபோதிலும் பழைய படைப்பாளிகளிடமும் பழைய இலக்கண உரையாசிரியர்களிடமும் இத்துறை அரும்பி இருந்தது. தமிழில் 1921-22-இல் எழுதப்பட்ட Kamba Ramayana - A Study[1] என்ற நூல் தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வில் முதலிடமும் தனி இடமும் பெற்றிருக்கிறது.

தமிழின் புதிய துறைகள் ஆங்கிலமொழியைச் சார்ந்தே வளர்ந்தன. இதன் விளைவாக ஆங்கில இலக்கிய மரபில் காணும் குறைகள் தமிழிலும் பரவின. ஆங்கில மொழியைப் பொறுத்த அளவுக்கு மிக அண்மையிலேயே இத்துறை உருவாயிற்று. ஒப்பியல் இலக்கியம் [Comparitive Literature] என்ற சொற்றொடர் 1848-இல் தான் மாத்யூ ஆர்னல்டு (Mathew Arnold) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒப்பு இலக்கிய ஆய்வு முன்னோடிகளில் ஒருவரான தேன் [Hippolyte Taine 1828-1893] 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இத்துறையைத் தொடக்கி வைத்து விட்டார்.

0 1. தேன், ஒப்பிலக்கிய ஆராய்ச்சியாளன் கவனம் செலுத்தவேண்டிய பொருள்களைக் குறிக்குமிடத்து "இனம், சூழலமைவு, காலம், மனத்திறன் என்பனவற்றை வற்புறுத்தினார். அத்துடன் இலக்கிய ஆராய்ச்சி ஓர் அறிவியல் ஆய்வு போல நடத்தவும்

---

1. Kamba Ramayana-A Study - By V. V. S. Aiyar

(12-6-71-இல் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தில் படிக்கப்பெற்ற கட்டுரை.)

அதனைச் சரிபார்க்கவும் மேலும் மேலும் திருத்தமுறச் செய்யவும் முடியும்[2] என்று ஆணித்தரமாகக் கூறினர்.

1.0. ஓர் இலக்கியத்திற்கு இனமான வேறு ஓர் இலக்கியத்தை எடுத்து வைத்து அவ்விரண்டிற்கும் இடையே இருக்கின்ற ஒற்றுமை வேற்றுமைகளையும் இலக்கியச் செழுமைகளையும் பாவிய ஒழுங்குகளையும் கரு, உரு, உத்தி ஆகியவற்றைக் கையாண்ட முறைகளையும் திறனாய்வு முறைகள் எடுத்துரைப்பதே ஒப்பு இலக்கிய ஆய்வின் நோக்கம்.

இதன் பயன்கள்:

1. 1. வேறுமொழி இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவற்றினிடையே காணப்படும் ஒருமைப்பாடுகளைக்கொண்டு உலகளவில் பாக்களின் பொதுமைகளைத் தெளிந்தறிய முடியும்.

1. 2. அனைத்திலக்கியத்திற்கும் பொதுவான இலக்கியக்கொள்கை -களை வரையறுக்க முடியும்.[3]

1. 3. பாவலர் ஒவ்வொருவரின் தனித்தன்மைகளைப் பிரித்தறிந்து இனங்காண முடியும்.

1. 4. கரு ஒன்றுயினும், பொருள் ஒன்றேயாயினும், வெவ்வேறு பாவலனுல் வெவ்வேறு முறைகளில் எவ்வாறு கூறப்படுகிறது என்று கணித்தறியமுடியும்.

1. 5. வேற்றுமைகள் அமைதற்குப் பாவலனின் தன்னுற்றல் மட்டுமன்றி, அவன் சார்ந்த மொழி, குமுகாய இயற்கைப் பின்புலங்களும் காரணங்களாக இருப்பதைத் தெளிந்துகொள்ள முடியும்.

2 1. வேற்றுமொழி இலக்கியத்தையும் தம்மொழி இலக்கியத்தையும் ஒப்பிட்டாய்வது ஒரு நிலை. ஒரே மொழியில் உள்ள

2. ஒப்பியல் இலக்கியம். க. கைலாசபதி. 1969. பக்-19.

3. வாரன் & வெல்லக் என்ற அறிஞர்களால் இதே அடிப்படையில் அருமையான நூல் ஒன்று எழுதப்பட்டுள்ளது. நூலின் பயர் இலக்கியக் கொள்கை—(Theory of Literature)

ஓரின இலக்கியங்களை ஒப்பிட்டாய்வது பிறிதொரு நிலை.

இங்கே இரண்டாம் நிலையின் அடிப்படையில், இரண்டு சிறு பாவியங்கள் ஆராயப்படுகின்றன. வீராயி, ஐயை, என்ற இரண்டு சிறு பாவியங்களும் இருபதாம் நூற்றாண்டிலேயே எழுதப் பட்டன.[4] இரண்டின் இலக்கியத் தலைமையைப் பெண்டிரே பெற்றிருக்கின்றனர். இரண்டு பாவியங்களின் பெயர்களும் இலக்கியத் தலைவியராலேயே பெயர் பெற்றுள்ளன. இரண்டும் செய்யுள் வடிவிலேயே எழுதப்பட்டுள்ளன. வீராயி ஆசிரியமண்டிலத்தாலும் ஐயை ஆசிரியப் பாவாலும் இயற்றப்பெற்றுள்ளன. வீராயி தமிழ் ஒளி என்ற பாவலரால் 1947-ல் எழுதி வெளியிடப் பெற்றது. ஐயை, துரை-மாணிக்கம் [பெருஞ்சித்திரன்] என்ற பாவலரால் 1965-இல் சிறையில் எழுதப்பெற்று, 1968-இல் வெளியிடப்பெற்றது.

வீராயியின் கதைச்சுருக்கம்:—

3. 1. ஒரு முதிய பறையனின் மகள் வீராயி. மழை வெள்ளத்தில் தன் தந்தையை இழந்து ஏதிலி (அனாதை) ஆகிறாள். 'மாரி' என்ற சேரியில் வாழும் முதியவனாலும் அவன் மகன் 'வீரண்ணனாலும்' வளர்க்கப்பட்டு பருவப்பாவை ஆகிறாள். புதுப்பட்டிப் பண்ணைக்கார (நிலக்கிழா)ரிடம் வேலை செய்து கூலி வாங்கச் செல்லும்போது' கற்பைச் சூறையாட முனைகிறான் பண்ணைக்காரன். தக்க வேளை வீரண்ணனாகிய வீர அண்ணன் பண்ணைக்காரனைச் கொன்று தங்கையைக் காப்பாற்றுகிறான். அறமன்றம் அவனைத் தூக்கிலிடுகின்றது. மனம் பதைத்த வீராயி அவையத்தாரிடம் வழக்குரைத்தும் பயனற்றுப் போகிறது. முடிவில் மாரியுடன் ஊரை விட்டே, நாட்டை விட்டே பிழைக்கவேண்டித் தென்னாப்பிரிக்கா செல்கிறாள். அடிமையாக விலைபேசப்பட்டுத் தேயிலைத் தோட்டத்திலே துன்புறுத் தப்படுகிறாள். மாரியும் காலனுக்குப் பலியாகிறான். தனித்த ஆயிக்கு 'ஆனந்தன்' என்பான் காதலனாகின்றான். இருவரும் தாயகத்திற்குத் திரும்பி வருகிறார்கள். வந்தவர்களை ஆனந்தன் பெற்றோர் மண மக்களாக ஏற்க மறுக்கின்றனர். காரணம் கவுண்டர் குலப்பெருமை

4. 'தமிழ் ஒளி' என்பவரால் வீராயி 1947–இலும், துரை–மாணிக்கம் (பெருஞ்சித்திரன்) என்பவரால் ஐயை 1968-இலும் வெளியிடப்பெற்றது. கிடைக்குமிடம்:- தென்மொழி அச்சகம், கடலூர்-1.

பறைச்சி வீராயியால் கெட்டுவிடும் என்ற குலவெறியே. இப்பெருங்குலத்தடையை மீறி ஆனந்தன் வீராயியை மணம் முடிக்கிறான். இருவரும் ஆனந்தன் தந்தையின் ஏவலர்களால் அடித்துக் கொல்லப்படுகின்றனர்.

ஐயையின் கதைச் சுருக்கம் :—

3. 2. பெற்றோர் அற்ற 'ஐயை' தன் உற்ற உறவான அத்தை முத்தம்மையால் வளர்க்கப்பட்டு வாழ்கிறாள். மாமன் விட்டுச்சென்ற ஆடுகளை நாளும் குன்றத்தில் மேய்த்து வருவாள். அவள் உளமோ நகரில் பயிலும் அத்தான் 'செம்மலை' நாடும். அவனை எண்ணி, அவன் வரவை எண்ணி நாளைப் போக்கி வருகிறாள். அத்தானின் வரவு நாளும் வந்தது. ஐயை தன் காதல் உள்ளத்தைத் திறந்து காட்டும் வேளை, அவன் 'தும்பை' என்ற வேறொரு பெண்ணிடம் காதல் கொண்டதை அறிந்து, உளம் உடைகிறாள். அத்தை தன் மகன் ஐயையை மணக்க மறுத்தமைக்காக வீட்டை விட்டே அவனை வெளியேற்றுகிறாள். கடுந்துயரால் கால வெள்ளத்தில் கலமென அத்தை ஐயையைத் தனிக்க வைத்து இறந்துவிடுகிறாள். என்றாவது அத்தான் வருவான் அன்றிலை மணப்பான்; அணைப்பான் என்ற நம்பிக்கையில் நாளும் குன்றம் நாடித்தேடிக் காணாது பெருமூச்செறிகிறாள், ஐயை. திடீரென ஒருநாள் ஒருவன் இளஞ்சிறான் ஒருவனைத் தோளில் தூக்கிப் பாதையில் வருவதைக் கண்ட ஐயை அத்தானோ என ஓடிப்பார்த்து ஏமாறுகிறாள். வந்தவன் தும்பை நோயுற்று இறந்ததாகவும் செம்மல், அன்னையிடம் குழந்தையை ஒப்படைக்கச் சொல்லிப் பட்டாளத்தில் சேர்ந்து விட்டார் என்றும் கூறினான். அத்தானோடு வாழத்துடித்த ஐயைக்கு ஆறுதலாக அவன் மகன் அரிமா ஏந்தல் கிடைத்தான். அவனோடு உண்டு, உடனாடி, உடனுறங்கி ஊடாடுவாள். அவனை அம்மா என அழைக்கச்செய்து, தன்னைத் தாய்மை உணர்வுக்குள்ளாக்கிக் கொள்கிறாள்.

பட்டாளத்தினின்று செம்மல் என்றோ வருவான் மணப்பான். என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

... ... ஆனால்
ஆங்கோர் உண்மை ஐயை அறியாள்.
அதுகாண், செம்மலின் ஆருயிர்
எதிர்ந்த படைமுகத்து இறந்தது என்பதே!

பாவிகப் படைப்பு[5]:—

4. 0. வீராயி குமுகாயச் சீர்திருத்தத்தை நடுவாக வைத்து எழுந்துள்ளது.

"குருதியினை வியர்வையெனக் கொட்டி உழைத்தோரின்
குடும்பங்கள் காக்கப்பட்டு ஏழ்மை போக்கப்பட வேண்டும்

என்பது வீராயி பாவியத்தின் அடிச்சுருதியாகும்.

"சொத்தெல்லாம் விளைத்தவனை வையம் சுரண்டுகிறது
சுடர்மாடம் கட்டியவன் வெயிலிடைப் புழுவாய்க்
கொத்தடிமை ஆகின்றான்."

—என்று குமுகாயத்தின் ஏழ்மைப் பகுதிகளை எடுத்துக்காட்டி நெஞ்சில் ஏழையர் மீது விருப்பையும்,

"மஞ்சத்தில் பஞ்சணையில் நெஞ்சுவக்கக் குந்தியிருக்கும் பெருந் தொந்திக்காரர் மீதும் சரிகைத் தலைப்பாகை, பேர் பெற்ற பெரிய-தனக்காரர் மீதும்"

வெறுப்பையும் ஊட்டத் துடிக்கிறார் ஆசிரியர். பணத்தில் மலையாக வாழும் இவர்கள் குணத்தில், வஞ்சநெஞ்சில் சாய்க்கடையாக வாழுவதையும் புதுப்பட்டி நிலக்கிழார் படைப்பின்வழியாக எடுத்துக் காட்டுகிறார்.

"மாறுகண்ணும் பருத்திப்பையில் கூறை வயிறும், கீரைமத்துப் போல்வெளுத்த ஊளை ஊறு நாசியும், தட்டி நெரித்த மாங்கொட்டை-போல் ஈயடித்த வாயும், தாறுமாறாய் மீசையில் அஞ்சாறு மயிரும், தூங்கல் சன்னைக் கடாப்போல் நடையும், மொண்ணைமுகமும் வேறு கீறி ஒட்டவைத்த ஏறு காதும்"[6]

உடைய பண்ணைக்காரர்களின் கொடுமையைப்படம் பிடித்துக்காட்டு கிறார். வேலை செய்யும் பணிப்பெண்ணைப் பார்த்துப் பல்லிளிப்பதும் தன் வீட்டுக்கு அழைத்துக் கற்பை விலை பேச நினைப்பதும் அவன் மீது அளவிறந்த வெறுப்பை உண்டாக்குகின்றன. டெசு ஆப் தி டெர்பர்வில் (Tess of the Durbervilles] என்ற புதினத்தில்

5. 'பாவிகம் என்பது காப்பிய பண்பே'-தண்டியலங்காரம்-35. பாவிகம்—தற்காலத்தில் வழங்கும் கரு [theme] என்ற பொருளைத் தாங்கி இருக்கிறது. இங்கும் அதே பொருளில் ஆளப்பட்டுள்ளது.

6: முக்கூடற்பள்ளு— பா - 53

தாமசு ஆர்டி இதே போன்ற ஒரு கதையுறுப்பைப் படைத்துக் காட்டுகிறார். டெசு என்ற அழகுமிக்க பால்பண்ணை வேலைக்காரியை அவன் கற்பழித்து விடுகிறான். அதன் விளைவால் அவள் வாழ்வு மலரே கருகிப் பொசிந்து விடுகிறது. துயரத்தில் ஆழ்த்தப்பட்ட டெசு தன்னைக் கற்பழித்த அந்தப் பண்ணைக்காரனைத் தானே குத்திக் கொன்றுவிடுகிறாள். இதேபோன்ற பரபரப்பு உணர்ச்சியால் வீராயி யின் அண்ணன் வீரண்ணன் புதுப்பட்டி நிலக்கிழாரைக் கொன்று விடுகிறான். இதனைப் படிக்கும்போதே நில த் திமிங்கலங்களைக் கொன்று ஒழிக்கவேண்டும் என்ற வெறி உணர்ச்சி நமக்குத் தோன்றுகிறது. ஆசிரியர் எந்த உணர்ச்சியை ஊட்ட நினைத்தாரோ அந்த உணர்ச்சியை ஓரளவு ஊட்டி விடுகிறார்.

4. 1. ஐயை:— *"பெண் உடலில் மென்மையானவள்; உள்ளத்தில் வன்மையானவள்; உணர்விலோ ஆழமும் அகற்சியும் கொண்டவள்; பல்லாயிரம் எண்ணக்கால்கள் அவள் உள்ளத்தில் ஊன்றியுள்ளன. அவற்றிற்குச் சிறகுகள் உண்டு. வல்லமை உண்டு. அவ் வெண்ணங்கள் ஒன்றிலும் ஊன்றாமல் இருக்கும்வரை அவளை நிலைப்படுத்த எவராலும் இயலாது; ஒன்றில் ஊன்றிவிட்டாலோ அவற்றைச் சிறிதே பெயர்க்கவும் எவராலும் முடியாது".*

ஐயை பாவியத்தின் உயிர்நாடி இதுதான்!

ஒரு வித்து பூவாக மலர்ந்து, காயாக முதிர்ந்து கனியாக நிறைவுறுதல்போல், ஒருபெண் பேதையாய் விளங்கிப் பெண்மையாய்ச் சமைந்து, தாய்மையாய் நிறைவடைகிறாள். இம்மூன்று பருவங்களும் பெண்ணின் மூன்று வாழ்க்கைகள். முதற் பருவத்தில் அவளுக்கு அவளே விளங்காதவள். இரண்டாம் பருவத்தில் அவளுக்குப் பிறர் விளங்காதவர்; மூன்றாம் பருவத்தில் பிறர்க்கு அவள் விளங்காதவள்.[7]

4. 2. ஐயையின் மூன்றாம் பருவமாகிய தாய்மைப் பருவத்தைக் காணும் பேறு நமக்குக் கிட்டவில்லை. பாவியத்தின் பெரும்பகுதியிலும் அன்பு வெள்ளத்தில் அழுந்திக் கிடக்கும் ஐயையைத்தான் காணமுடிகிறது. அவளது அன்பு அவனால் ஏற்றுக் கொள்ளப் படாதபோது, மணமும் முறிந்து மனமும் முறிந்து பொடிந்து நொடிந்து அவள் விடும் துயரநெட்டுயிர்ப்புகள் நம்விழிகளில் நீரைச் சுரக்கச் செய்கின்றன. ஆங்கிலப் பாவலன் 'கீட்சு' (Keats)

7. *ஐயை—பாவலர் பெருஞ்சித்திரனார் முன்னுரை.*

படைத்த இசபெல்லா (Isabella) காட்டிற்குச் சென்ற தன் காதலன் மீண்டு வராதபோது அவன் வருவான், வருவான் என்று நம்பிக் கிடக்கிருள். அந்தப் பேதை நெஞ்சு ஐயையின் பேதை நெஞ்சோடு ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது. தன் கண்களிலும் பிறர் கண்களிலும் அவலக்கண்ணீரைப் பெருக்குவதில் இசபெல்லாவை விட ஐயை மிஞ்சி விடுகிருள் என்றுதான் சொல்லல் வேண்டும்.

4. 3. இரண்டு பாவியங்களையும் படித்து முடித்த பின் வீராயியின் சாவைக் கண்டு இரங்குவதை விட ஐயையின் அவலவாழ்வை கண்டே மிகுதியாக இரங்குகிறேம். அவளது கொள்கை வாழ்வை விட ஐயையின் காதல் வாழ்வுதான் நெஞ்சில் நிலைபேறு எய்துகிறது (இவை பாவியங்களின் கொள்கை நோக்கின் மேலுள்ள குறை அன்று. பாவியத்தை நடத்திச் சென்ற படைப்பாளியைச் சார்ந்த குறையேயாகும்.)

உறுப்பினர் படைப்பு:—

5. 0: அடர்ந்த இரவு வேளை ... ...
மழைவெள்ளத்தில் மிதந்து வரும் ஒரு வைக்கோற்போர்...
அப்போர் மீது,

*"கூரம்பின் குறி தப்பி பிழைத்திட்ட பறவைக்
குஞ்சுகள் போல் நெஞ்சிணைத்து வைக்கோலின் போர்மேல்
ஆரவுடல் தழுவியுமே கிடக்கின்றர்"*

அவர்களுள் ஒருவன் கிழவன்; இன்னொருத்திதான் வீராயி. இவளது வாழ்க்கையில் சுழல்கள் பலவேறுதிசைகளில் சுழன்று அடிக்கின்றன. அவள் சாரும் இடம் எல்லாமே சாவின் இடமாக மாறுகின்றன. தன் தந்தை மாண்டார். பின்னர் வீரண்ணன் குடும்பத்தைச் சார்ந்தாள். வீரன் தூக்குமேடை ஏறினன். மாரி துயரால் மடிந்தான். காதலன் 'ஆனந்தன்' அடிபட்டுச் செத்தான். அவள் விரும்பியோ விரும்பாமலோ வரும் துயரங்கள், இவை. துயரை மீறி வாழும் துணிந்த கதையுறுப்பாக அவள் இயங்குகிருள். தூய உறுப்பாகவும் மாறுகிருள்.

5. 1. வெள்ளத்தில் பலரும் அழுந்தி அழியும் போதும் தன் முதிய தந்தையோடு வைக்கோற் போரில் ஏறித்தாவும் துணிவும் அண்ணனுக்குத் தூக்குத் தண்டனை தந்த வேளையில் நடுவர்களையே பார்த்து,

"தப்பிலி மக்களே நீதி இதோ?
நீங்களும் சாவது நிச்சயமே!"

என்று ஏசும்போதுள்ள துணிவும், தன் வளர்ப்புத் தந்தையோடு தன்னந்தனியாகத் தென்னுப்பிரிக்கா செல்லும் துணிவும், ஊரார் தன் கணவனேடு தன்னை அடிக்கும்போது அஞ்சாமல் ஏற்றுச் சாகும் துணிவும் உண்மையில் வீராயியை 'வீர' ஆயி ஆக்குகின்றன என்ருலும் வீராயி போன்ற வீராயிகள் மேலும் தோன்றும் படியாக வீராயி படைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அந்தப் பார்வையில் பாவலர் தமிழ் ஒளிக்கு ஓரளவே வெற்றி.

5. 2. ஐயை:— ஊர்க்கோடியில் இருக்கின்ற மலை. அம் மலை மீது படிந்திருந்த பசுமை உமிழும் மரங்கள்- தங்களது பட்டு மேனியை ஆட்டியும் அசைத்தும் கதறியும் குழறியும் புல் மேயும் ஆடுகள். அவற்றின் ஊடே யாரையோ எதனையோ நினைந்து துடிக்கும் ஓர் ஏழைப்பெண்.
அவளே ஐயை !

அவளது நினைவிலும் செயலிலும் நகரத்தில் பயிலும் அத்தை மகன் அத்தானின் நினைவு நிழல்கள் நிழலிடுகின்றன. அவன் வருவான் வருவான் என வரவு நாள் குறித்துக் கற்களைக் குவிக்கின்ருள். கற்களும் மலையாய்க் குவிந்தன. ஆனல் காதலன் வரவில்லை. வீட்டுக்கு மடல் வரைந்தவன் ஐயையின் நலம் பற்றிக் கேட்டுக் கூட எழுதாதபோது,

"எழுதும் மடல்கள் எல்லா வற்றிலும்
ஐயை எனுமோர் அடிமைப் பேதை
இருக்கின்ருளா இறந்தா ளா—என
ஒருவரி—வேண்டா—ஒரு சொல் லாகிலும்
எழுதா திருந்திட என்பிழை செய்தேன்"?

என்று ஐயை அத்தையை வினவும்பொழுது தொண்டை கமற விம்முகின்ருேம். கனவு கண்டு 'கண்ணகித் துடிப்புத்' துடிக்கும் பொழுதும் அவளது அன்பு நெஞ்சு ஆருத்துயரில் ஆழ்வதைக் காண்கிருேம். அத்தான் அன்பு தனக்கு இல்லை என்றவுடன் ஐயையின் நாடி தளர்ந்தது; நாளம் வெடித்தது; ஓடிய குருதி உறைந்து நின்றது. அத்தான் படையில் சேர்ந்தான். அவன் மகனைத் தன் மகனுக ஏற்றுக்கொண்ட தாய்மைக் காதலைப்பொறுத்த அளவுக்கு ஐயையின் காதல்,

அனார்கலியின் காதலைவிட உயர்ந்தது;
சூலியட்டின் காதலைவிட ஆழ்ந்தது;
கிளியோபாத்ராவின் காதலைவிட அகன்றது.

5.3.1. அத்தானோடு தான் வாழநேராவிட்டாலும் அவனோடு வாழ்கின்ற தும்பையாவது அவனுக்காக வாழவேண்டும் என்று ஏங்குகிற ஏக்கம் ஐயையின் அன்பின் தூய்மையை எடுத்துக் காட்டுகிறது.

5. 3. 2. அத்தான் மகனுன ஏந்தல் தன்னை அத்தை என்று அழைத்தபோது 'அம்மா என்றே அழையடா கண்ணே' என்று தாய்ப்பாசம் மீதூர வேண்டுகிறது.

5. 3. 3. ஐயை காட்டும் இத் தாய்ப்பாசம், காதலன் சாருதத்தனின் மகனுன உரோகசேனனிடம் வசந்தசேனை காட்டும் அன்பை விடப் பெரியது.[8]

சாகலாசனுர் காட்டும் அகநானூற்றுக் காதல் பரத்தையின் அன்பைக் காட்டிலும் ஆழ்ந்தது.[9]

5. 3. 4. அத்தை தன்னை ஒத்தான் ஒருவனைத் திருமணம் செய்து வாழ்வதே சிறப்பு என எடுத்துரைத்தபோது

ஐயை,

எண்ணமாய் அறிவாய் இயங்கும் உள் உயிராய்த்
திண்ணமாய்க் கலந்தவென் காதல் திருவினை
மறந்துபோ என்னுது மணந்துகொள் என்னுது
இறந்துபோ என்னினும் இறைவனுல் என்னுளத்து
ஆன்று சுடர்விடும் அத்தான் நினைவோடு
ஈண்டே இவணே இறந்தொழி வேனே!

என்று கூறி 'ஐயகோ அன்னுய்' என்றே அலறி வீழ்ந்த ஐயையின் செயல்,

வசந்தமாலையால் வற்புறுத்தப்பட்ட பொழுது, கோவலனுக்குப் பிறகு கலை வாழ்வு கூடவேண்டா என்று வெறுத்தொதுக்கிய மாதவியையும்,[10] தாலிகட்டி கணவன் என்ற நிலையில் இல்லாத கலிப்பகைவன் இறந்தபின் அவனுக்காகத் துறந்து சிவக்கோலம்

8. *மண்ணியல் சிறுதேர் — சூத்திரதாரன்*
9. *அகநானூறு — களிற்றியானை நிரை – 16.*
10. *சிலப்பதிகாரம் — மணிமேகலை – ஊரலர் உரைத்த காதை.*

புனைந்த திலகவதியையும் நினைவு படுத்துகிறது.[11]

5. 3. 5. படையில் சேர்ந்த செம்மல் மடிந்துவிட்டதை அறியாது அவன் வருவான்; இன்பம் தருவான் என்று எதிர் பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கும் துயரக்காட்சி நம் உள்ளத் துயரத்தை மலையாக்குகிறது; கண்ணீரைக் குளமாக்குகிறது.

6. 1. வீராயி ஊட்டிய மறவுணர்வைவிட, அவலத்தை விட; ஐயை ஊட்டுகின்ற காதல் மறமும், காதலின் தோல்வி அவலமும் நெஞ்சில் நீங்கா இடம் பெறுகின்றன.

7. 1. கதையுறுப்பினர்களைப் பற்றிய ஒப்பீடு:—

வீராயியை நடுவாக வைத்துத் தூய்மைப் போராட்டத்தை நடத்தும் வீரண்ணன், மாரி, ஆனந்தன் ஆகிய கதைப்படைப்புகள் சிறந்து விளங்குகின்றன. 'வீர'த்தின் திருவுருவாக வீரண்ணனும் துயரத்தின் திருவுருவாக மாரியும், கொள்கைத் திருவுருவாக ஆனந்தனும் விளங்குகிறார்கள். தன் உடன் பிறவா உடன் பிறந்தாளின் கற்பைக் காக்கக் கொலையாளியாக மாறுகிறான் வீரண்ணன்.

தன் பெரு மகளின் வாழ்வுக்காக ஊரெல்லாம் உலகமெல்லாம் கடல் கடந்தும் தன் மகனை இழந்தும் சுற்றித் திரிகிறான் மாரி. குல வேறுபாட்டு இருளில் மூழ்கிக் கிடந்த இழிந்த குமுகாயத்தின் விடிவெள்ளியாக—புரட்சிக்காரனாகத் தோன்றுகிறான், ஆனந்தன். இந்த நல்ல கதைப் படைப்புகளுக்கு எதிராக வரும் புதுப்பட்டி நிலக்கிழாரும் நன்கு படைக்கப்பட்டிருக்கிறான்.

7. 2. ஐயை பாவியத்தில் நாம் நேரே சந்திக்கும் கதையுறுப்புகள் நான்குதான். ஐயை, அத்தை, அத்தான் செம்மல், அவன் மகன் ஏந்தல்.

அத்தைப் படைப்பு மிக அருமையாகப் புனையப்பட்டிருக்கிறது. தன் மருமகளை மகளாகவே வளர்த்து வாழவைக்கத் துடிக்கும் அத்தை அவள் வாழ்வு முடிக்கும்போது தன் வாழ்வையே முடித்துக் கொள்கிறாள். முறைகேட்டை முதலாக வைத்து மகனை அணைப்பதைவிட முறைபாட்டை முதலாகவைத்து மருமகளை அணைப்பது மேல்; மகனை இழப்பது மேல் என்ற முடிவுக்கு வர ஐயையின் அத்தை ஒருத்தியால்

11. *பெரிய புராணம். – திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்–32*
"அந்த முறையால் அவர்க்கே உரியது நான் ஆதலினால்
இந்தவுயிர் அவர் உயிரோடு இசைவிப்பன்" 32–ஆம் பாடல்

தான் முடியும். செம்மல் ஐயையின் அன்புத் தகுதிக்கு முன்னால் அன்புத்தகுதி இல்லாதவன் ஆகி விடுகிறான். ஐயையின் அன்பை ஏற்றுக்கொள்ள மறுக்கும் போது 'கோவலன் வாடை' வீசினாலும் முதல் மனைவி மறைந்த பிறகு பழைய மலரையும் நாடாமல் புதிய மலரையும் நாடாமல் போர்க்களத்தை நாடுவது பாராட்டத்தக்கது.

7. 3. தும்பை வராத கதைப்படைப்பாக வந்தாள். வாழாத உறுப்பாக மடிந்தாள். ஆயினும் ஐயை என்ற தனிப்பெண்ணின் வாழ்விலும் ஐயை என்ற தனிப்பாவியத்தின் வாழ்விலும் தும்பையின் இடையீடே திருப்புமையமாக விளங்குகிறது.

7. 4. வீராயியில் வரும் மாரியும், ஐயையில் வரும் அத்தையும் ஒத்த உறுப்பினர்கள். இருவருமே தமக்காக வாழாமல், தாம் பெற்றெடுத்த குழந்தைகளுக்காகவும் வாழாமல், தாங்கள் வளர்த்தெடுத்த பெண் குழந்தைகளுக்காக வாழ்கிறார்கள். வீரண்ணன் தங்கையின் கற்பைக் காப்பதற்காக வேண்டி நிலக்கிழாரைக்கொன்று'வீர'னானான். கொலைத்தண்டம் பெற்றான். செம்மல் தும்பையின் சாவு இழப்பிலிருந்து மீள்வதற்காகப் போர்க்களத்திற்குச் சென்று பகைவர்களைக் கொன்றான். கொலையுண்டான். இரண்டுமே பிறருக்காக நேர்ந்த ஈகச் சாவுகள்.

7. 5. வீராயி ஆனந்தனுக்கு மனைவியாகிறாள். ஆனால் தாயாகவில்லை. ஆனால் ஐயை ஏந்தலுக்காகத் தாயாகிறாள் ஆனால் செம்மலுக்கு மனைவியாகவில்லை. இருவருமே இரண்டையும் பெறாதவர்கள். இரண்டில் ஒன்றைப் பெற்றவர்கள். ஒருத்தி மனைவிமையைப் பெற்றாள். இன்னொருத்தித் தாய்மையைப் பெற்றாள்.

8. 1. பாப்புனைவு:— வீராயியின் கதையில் நீட்சியும் திருப்பங்களும் சிக்கல்களும் இருக்கின்றன. கதையோட்டத்தில் அமைதியான நீரோட்டப் பாங்கு இல்லை. ஆனால் ஐயையின் கதை ஒரே உச்சக் கட்டத்தைப் பொருத்தமான இடத்தில் போதுமான அளவு பெற்றிருக்கிறது. இரண்டுமே அவலத்தில் முடிகின்றன. அங்கே வீராயி சாகிறாள். இங்கே ஐயை செத்துக்கொண்டிருக்கிறாள். ஆனால் ஒருத்தியின் சாவு ஊட்டாத துயரத்தை ஒருத்தியின் வாழ்வு ஊட்டுகிறது. கதைத் தொடக்கத்திலும் கதை நடப்பிலும் கதை முடிப்பிலும், ஐயை வீராயியை மிஞ்சி நிற்கிறது.

8. 2. வீராயியில் குமுகாயத்தில் படிந்து கிடக்கும் குல வெறியும் ஏழ்மைக் கோலமும் மையம் பெறுகின்றன. இதனால் 'கொள்கைப்பரப்பு வாடை'' மிகுந்து வீசுகிறது. பாவியத்தில் வரும்

சிறந்த கற்பனை நறுமணங்கள் எடுபடாமல் போய் விடுகின்றன. கொள்கைப் பரப்புப் புளியமரத்தின் கீழ்க் கற்பனை வேப்பமரம் கருகி விடுகிறது.

8. 3. ஆனால் ஐயையில் பெண்மையின் தூய்மையே பாவியத்தின் அடிப்படைச் சாடாக இயங்குகிறது. அப்படி இயங்கினாலும் பா, நயங்கள், கற்பனைச்சுவைகள் களப்பலி ஆகாமல் காக்கப்பெறுகின்றன. பாவலனின் கொள்கைத் தென்னையின் கீழ் கற்பனைப் பூஞ்செடிகள் கருகாமல் பூத்துக்குலுங்குவதை ஐயையில்பார்க்கிறோம்.

8. 4. 'தமிழ் ஒளி' இல்லாமையை எடுத்துக் காட்டுவதில் முழு வெற்றி பெறுகிறார். அவர் கருத்துகளை விளக்கும் புதிய உவமைகள் பல. ஓர் எடுத்துக் காட்டு.

வெள்ளத்தில் வீழ்ந்து மிகத் தத்தளித்து
மேலேறிக் கரை வந்த எறும்பைத் தீயில்
தள்ளி விட்டால் எவ்வாறும் அவ்வாறுகத்
தவிப்புற்றுத் தேயிலையின் தோட்டத்துள்ளே
கள்ளொழுகும் பாளையெனக் கண்ணீர் சிந்திக்
காரிகையும் மாரியும் அழுதார்,

8. 5. 'பெருஞ்சித்திரனின்' ஐயையில் புதிய உவமைகளுக்கிடமில்லை என்றாலும் மரபு உவமைகளைக் கையாண்ட வகை பாராட்டத்தக்கது.

8. 6. 'வீராயி' சேரி, தோட்டம், சிற்றூர், வயல், புறச்சூழல்களைக் கருக்கொண்டு உருக்கொள்கிறது.

இயற்கையின் விளைச்சல் தானே பாவியம். கதைப் படைப்புகளின் உரையாடலின் போதும் உறுப்பினர்களின் சுற்றுப்புறச் சூழலின் போதும் உயர்வு நவிற்சி வந்து கெடுக்காமல் இயல்பு நவிற்சி குலையாமல் கையாளப்பெறல் வேண்டும். இத்தன்மை வீராயியை விட ஐயையில் அழகாக, அளவாக, மிகுவாகப் பின்னப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் முல்லைப்புறப்பாடல் (Pastoral Poem) அமைவதைப் போல ஐயை இயற்றப்பட்டிருக்கிறது. ஐயை ஆடு மேய்க்கும் இடம், அவள் வாழும் குடிசைப்புறம் இவை எல்லாம் அழகாகக் காட்டப்பட்டிருக்கின்றன. ஓர்சுவொர்த் [Words worth] ஆங்கிலத்தில் எழுதிய மைக்கேல் [Michael] என்ற முல்லைப்புறப் பாடலின் சாயலை ஐயையில் காணலாம். ஆனால் தன் மகனது வரவுக்காகக் கல்வீடு கட்டிக்கொண்டிருக்கும் மைக்கேலின் அன்புப்பாசத்தை விட, காதலன் வருவான் என்ற நம்பிக்கையில் ஆழ்ந்து கிடந்து கற்களைக் குவித்து வைத்து எண்ணிப் பார்க்கும் ஐயையின் படப்பிடிப்பு சிறந்தது; உயர்ந்தது.

0

தமிழ் மொழியைத் தனித்தமிழாகத் தூய்மை போற்றும் நெறியில் வளர்த்து வரும் ஒரே மெய்யான ஏடு தென்மொழியே. இத்தகு இதழில், உண்மைகளை ஊடுருவிக் கண்டு, அலசிப்பார்த்து அஞ்சா நெஞ்சுடன் உணர்ச்சிப்பிழம்பாக எழும் உங்கள் ஆசிரியவுரை தனிச் சிறப்புடையது. தங்கப் பதக்கத்தின் மேல் முத்துப்பதித்தது போன்ற எழிலும், ஏற்றமும் கொண்டது. இத்தகு சிறப்புகளைக் கொண்ட தென்மொழியை – தென்மொழியின் மெய்யான கருத்து களைக் கண்டு ஆராய்ந்து பார்க்காமல், 'பட்டம், பதவி, தன்னலம்' என்ற குறிக்கோளுடன் சென்று கொண்டுள்ள தமிழக அமைச்சர் களைத் திருத்த நினைக்கும் உங்களை, 'அழுக்காறு கொண்டவர் கையூட்டு வாங்கிக் கழக அரசைத் திட்டுபவர், பெரும்பதவி இல்லை யென்று பிதற்றுபவர், வெறிப்பிடித்தலையும் இடதுகளின் பாடத்தைக் கேட்டு நடப்பவர்' என்று தம் தூவலில் சாய்க்கடை நீரை நிரப்பி, மாசு கற்பிக்க மது மயக்கத்தில் 'புதுவையூரன்' பழிகளைச் சேர்த்து உளறி ஏதோ கிறுக்கியுள்ளார். அது காஞ்சி இதழில் வெளிவந்துள்ளது. தென்மொழியில் அமைச்சரின் நடத்தையை அப்படியே உள்ளதை உள்ளவாறே உயர்தனிச் செம் மொழியில் நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். தன்னாட்சிக் கொள்கையைப் பற்றியோ தன்மான இயக்கப் பகுத்தறிவுக் கொள்கையைப் பற்றியோ இன்றைய தி. மு. க. விற்குச் சிறிதும் கவலையில்லை. இந்திராவின் பேராயக்கட்சியைத் தமிழகத்தில் நிலைப்படுத்தும் பணி யில் தான் இன்று தி. மு. க. வின் கவலை மிகுதியாக உள்ளது. தனித்தமிழ்நாடு கேட்டு ஏன் இன்று இவர் போராட்டம் நடத்தக் கூடாது. –தி. நா. நாகமணிச்செல்வன், திருப்பூர்-2.

0:265: கூற்றுடன்று மேல்வரினும் எதிர்நிற்கும் ஆற்றல்கொள் தமிழ்த்திருவே! தென்மொழியின் நடுநிலை பிறழா ஆசிரிய உரை களை ஊன்றிப் படித்து வருகிறேன். தங்களின் புற அகப் பகை களையும் சிறிது அறிகுவன். குடும்ப நலனும் பேணாது தமிழ்க்கும் தமிழர்க்கும் அல்லென்றும் பகலென்றும் பாராது பாடுபடும் செம்மல் பெருஞ்சித்திரனாரைப் பார்த்துக் "கையூட்டு வாங்கினார்" என்றார். கேளிர் போல் பகைவரை நினைக்கின் நாம் என்று தாம் உயர்வமோ? ஆயிரக்கணக்கான வள்ளுவரும், மறைமலை அடிகளும், பாவாணர் களும், பெருஞ்சித்திரனாரும் இணைந்தேவரினும் நம்தமிழரைத் திருத்த வும் தன்னுணர்வு கொள்ள வைக்கவும் இயலாதென்ற சோர்வு என் நெஞ்சில் தோன்றுகிறது. —சாத்தனூர்க்கிழான், மு. ஆறுமுகம்.

0:266: தமிழ்த் தாயின் நலத்திற்கே உயிர்வாழும் பெருந் தகையீர்! 'சாம்போதும் தமிழ் படித்துச் சாதல் வேண்டும் – என் சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்" எனும் பாட்டிற்கு இலக்– கணமாய்ப் பணியாற்றும், பாவல! தங்கட்கு எத்துணை இன்னல் இருப்பினும், இடுக்கண் தொடரினும், தங்களின் வாழ்வே மெய்யான தமிழ் வாழ்வு' தங்களின் நெஞ்சமே மெய்யான தமிழ் நெஞ்சம்! தங்கள் சொல் வெல்லும்! அதை வருங்காலம் சொல்லும். தளராது பணி செய்க! –க. அப்பாதுரை, நடுப்பட்டி அ. நி., திருச்சிமாவட்டம்.

0:267: 'காஞ்சி' இதழைக் கண்ணுற்ற தனித்தமிழ் அன்பர் களின் உள்ளம் குமுறி உடலில் உள்ள நரம்பெல்லாம் இரும்பாகிக்

(அடுத்த பக்கம் பார்க்க)

கண்கள் கனற்குழம்பைக் கக்கும் அளவிற்கு உண்மைக்கு மாருன செய்திகளால் குழைக்கப்பட்ட பொய்ம்மைச் சேற்றை-பெருஞ்சித்திர ஞரின் நிறை நோக்கில் குறையுண்டாக்கும் வண்ணம் வாரியிறைத்து இருக்கின்ருர் புதுவையூரனுர்.

'உண்மைத்தமிழன்' உயர்தமிழன் தனித்தமிழில் ஏடு நடத்தும் சிறப்புத்தமிழன் என்றெல்லாம் தன்னைப்பற்றிப் பிறர் போற்றவேண்டும்'' என்று ஏடு நடத்துகின்ருராம் பெருஞ்சித்திரனுர். இவரன்ன பேதையர் பாராட்டுவர் என்ரு ஏடு நடத்துகின்ருர்? என்னே வெள்ளறிவு! 'பகை எனக்கு விழிப்பூட்டுகின்றது; வசைகள் என்னை உறுதியாக்குகின்றன. பொய்ச்செய்திகள் பாதையில் உள்ள மேடு பள்ளங்களை எனக்கு எச்சரிக்கின்றன; நேர்மை எனக்கு வழி காட்டுகின்றது; உண்மை எனக்குத் துணை வருகின்றது; கடமை என்னை வழிநடத்துகின்றது. நட்பு என் அயர்வைப் போக்குகின்றது. தமிழ் எனக்கு ஒளி தருகின்றது! தாயகம் என்னை எதிர்நோக்கு கின்றது..............என்று கூறி, 'கெஞ்சுவதில்லை பிறர்பால்; அவர் செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை' என்ற கொள்கை குன்ருது நின்று அணுவளவும் பிறழாமல் நடந்துகாட்டிக் கொண்டிருக்கும் அருந்தலைவரை அரிமா மறவரைத் தூற்றுபவர்களை வருங்காலத் தமிழகம் எட்டப்பர் பட்டியலில் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. 'கொத்தடிமை செய்யாது கொடிகட்டி வாழ்ந்தார்கள் உனது முன்னேர்; குவலயத்தார் பெருமை தந்தார் அதனைக் கண்டு! ஆண்ட இனம் நாமல்லவோ? அச்சம் ஏனே? ஆருயிரை இழந்தேனும் அருமைமிகு திருவிடத்தை அமைப்போம்; காண்போம்' என்று முழங்கியவர்கள் கொள்கையை மாற்றிக்கொண்டு, உயிரைக் காத்துக்கொண்டு, வடவரின் அருட்டுணையால் பட்டம், பதவி, பகட்டான வாழ்வைக் கையூட்டாகப் பெற்றவர்கள் தாம் பெருஞ்சித்திரனுரைப் பார்த்துக் 'கையூட்டு வாங்கினுரோ கழக அரசைத் திட்டுதற்கு? பெரும்பதவி இல்லையெனும் பிதற்றலோ.........' என்றெல்லாம் கதையளக்கின்ருர்கள்.

—பா. செந்தமிழ்வேங்கை, திருவையாறு.

0:268: பெருந்தகை ஐயா!

உண்மையில், தென்மொழி விடுதலை வேட்கையர்க்குக் கிடைத்த ஓர் அணுக்குண்டு. கருத்துமுழக்கம் செய்கின்றகடல்முரசு! பட்டினப் பாலை பாடியதற்கு அன்றைய அரசன் ஆயிரம்பொன் கொடுத்தானும். இன்றைய தங்கள் பாட்டுக்கு இந்த அரசு பொன் கொடுக்கலாம். இல்லை என்ருலும் வருங்காலத்தில் தமிழகம் கொடுத்தே தீரும்.

பாவை—நடவரசன், மணி-நடவரசன். பட்டணம்.

0:269. தமிழகத்தின் இற்றைச் சூழ்நிலையில் 'அரசியல்' பற்றிய தெளிவான விளக்கம் அளிக்கும் இதழ், தங்கள் கருத்துகளைத் தாங்கி வருவதை உள்ளன்போடு வரவேற்கிருேம். 'தென்மொழி' இலக்கிய இதழாகவும் 'அரசியல்' தமிழக அரசியல் குழப்பங்களுக்குத் தீர்வு காணும் இதழாகவும் அமைய விரும்புகின்ருேம்.

-பொன்-மாறன், மதுரை-3.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.